Registered as Newspaper


# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா  செய்தி: 021 493 0000  விளம்பரம்: 021 493 1111

சுடர் :35  கதிர் :157  சித்திரை 17ஆம் நாள் புதன்கிழமை 29 ஏப்ரல் 2020  வள்ளுவர் ஆண்டு 2051

## 619 எகிறியது 'கொரோனா'

- நாளுக்கு நாள் பாதிப்பு அதிகரிப்பு
- நேற்று மட்டும் 31 பேர் அடையாளம்
- 134 பேர் குணமடைவு
- 478 பேர் சிகிச்சையில்
- 317 பேருக்கு தொற்று அறிகுறி



கொழும்பு, ஏப். 29

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 31 பேர் நேற்று மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

02 ▶

## கொரோனா சாவு 8

கொழும்பு, ஏப்.29

இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

வயோதிபர் ஒருவரே இவ்வாறு கொரோனாவால் உயிரிழந்துள்ளார். அவர் உயிரிழந்த பின்னர் இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனையின்போதே அவருக்குக் கொரோனா தொற்றுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

பிலியந்தலையில் திடீரென சுகவீனமுற்ற 82 வயதுடைய இந்த வயோதிபர் ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சுகவீனம்

02 ▶

## யாழில் சோதனை: 78 பேருக்கு தொற்றில்லை

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே பொருள்களை ஏற்றி இறக்கும் பாரவூர்திச் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் உட்பட 78 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்றில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களாக பல்வேறு பகுதிகளிலும் இருந்து 78 பேருக்கான கொவிட் 19 பரிசோதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்

02 ▶

## ஊரடங்கு மீறல் 600 ரூபா தண்டம்

*6 மாதங்கள் சிறைக்கும் வாய்ப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 29

ஊரடங்கை மீறியமை, தனிமைப்படுத்தல் நடைமுறையை மதிக்காது நடந்தமை ஆகிய குற்றங்களுக்காக ஒருவருக்கு 600 ரூபா தண்டம் விதித்தார் யாழ்ப்பாண நீதிவான். சந்தேகநபரை யாழ்ப்பாண நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் வைத்து நேற்றுக்

13 ▶

## 1,352 பேருக்கு எலிக்காய்ச்சல்!

*இலங்கைக்கு அடுத்த அதிர்ச்சி!*

கொழும்பு, ஏப். 29

இலங்கையில் இந்த வருடத்தில் இதுவரை 1,352 எலிக்காய்ச்சல் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவிவரும் பின்னணியில்,

02 ▶

## 220 கடற்படை சிப்பாய்களுக்கு கொரோனா

கொழும்பு, ஏப். 29

வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 220 சிப்பாய்கள் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜென

02 ▶

## குணமடைந்தார் அரியாலை மதபோதகர்

யாழ்ப்பாணம், ஏப். 29

அரியாலையில் அமைந்துள்ள பிலதெல்பியா ஆலயத்தின் மதபோதகர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து

02 ▶

## '9 ஏ' வரவில்லை: மாணவி சாவு

முல்லைத்தீவு, ஏப். 29

முல்லைத்தீவு சிலாவத்தையில் பாடசாலை மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சாதாரணதர பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த மாணவி இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

02 ▶

## இரட்டையர்களுக்கு கிளிநொச்சியில் '9ஏ'

கிளிநொச்சி, ஏப்.29

சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி, கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச்

02 ▶



## கொரோனா பரவாதிருக்க புதிய தேர்தல் முறைமை

*ஜனாதிபதியிடம் கொழும்பு பேராயர் வலியுறுத்து*

கொழும்பு, ஏப். 29

வீண்விரயங்கள், வைரஸ் தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்புள்ள தேர்தல் பரப்புரை முறைமையிலிருந்து விலகி, புதிய தேர்தல் முறைமையொன்றை ஏற்படுத்துவது காலத்தின் தேவையாகவுள்ளது என்று கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய இத்தேபானே தம்மாலங்கார மகாநாயக்க

02 ▶

## வடக்கில் 438 மாணவர்கள் 9 பாடங்களிலும் 'பெயில்'!

கொழும்பு, ஏப். 29

2019 டிசெம்பரில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்தில் இருந்து தோற்றிய மாணவர்களுள் 438 பேர் 9 பாடங்களிலும் சித்தியடைய தவறியுள்ளனர் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 204 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 88 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 68 பேரும், மன்னார் மாவட்டத்தில் 20 பேரும், வவுனியா மாவட்டத்தில் 58 பேரும் 9 பாடங்களிலும் சித்தியடைய தவறியுள்

02 ▶

## உண்மை நிலைமையை நிபுணர்களே கூறுங்கள்

*உயர்கல்வி அமைச்சு கோருகிறது*

யாழ்ப்பாணம், ஏப். 29

நாட்டில் கொரோனா தொடர்பான உண்மை நிலையை இராணுவத்தினரும் மருத்துவர்களும் மட்டுமன்றி, பல்கலைக்கழகங்களின் துறைசார் நிபுணர்களும் தெரிவிக்க வேண்டும் என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையிலான விசேட கலந்து

02 ▶

## 78...

பட்டன.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சந்தேகத்தில் சேர்க்கப்பட்ட 7 பேர், மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட 14 பேர், வவுனியா பொது மருத்துவமனையிலிருந்து 4 பேர், யாழ்ப்பாணம் கொழும்பு இடையே பொருள்களை ஏற்றி இறக்கும் பாரவூர்திகளில் பணியாற்றும் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் 30பேர், வவுனியா கொழும்பு இடையே பொருள்களை ஏற்றி இறக்கும் பாரவூர்திகளில் பணியாற்றும் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் 10 பேர், கொழும்பிலிருந்து கடமையின் நிமித்தம் மன்னார் மாவட்டத்துக்கு வந்தவர்கள் 13 பேர் என 78 பேருக்குப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அவர்கள் அனைவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## குணமடைந்தார்...

நேற்று இரவு வீடு திரும்பியுள்ளார்.

அரியாலை ஆலயத்தில் ஆராதனை நடத்திய சுவிஸ் மதபோதகருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவருடன் நெருக்கமாகப் பழகியவர்கள் காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்தில் கடந்த மாதம் 23ஆம் திகதி தனிமைப்படுத்தப்பட்டனர்.

மானிப்பாயைச் சேர்ந்த மேற்படி மதபோதகரும் தனிமைப்படுத்தப்பட்டார். இந்த மாதம் 3ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மதபோதகருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவர் வெலிகந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருந்தார். அவருடன் மேலும் 5 பேர் அங்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அவர்களில் 4 பேர் ஏற்கனவே வீடு திரும்பியிருந்தனர்.

இந்த நிலையில் மானிப்பாயைச் சேர்ந்த மேற்படி மதபோதகர் தற்போது குணமடைந்துள்ள நிலையில் நேற்று மாலை 5.30 மணிக்கு வெலிகந்த மருத்துவமனையிலிருந்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நோயாளர் காவு வண்டி மூலம் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். (ஒ.5)

## சிப்பாய்களுக்கு...

ரல் சவேந்திர சில்வா நேற்றிரவு தெரிவித்தார்.

நேற்றுமாலை 6 மணி வரையான கணக்கெடுப்பின்படி இந்த எண்ணிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது: "வெலிசறை கடற்படை முகாமில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது 146 சிப்பாய்கள் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேவேளை, கடற்படை முகாமில் இருந்து விடுமுறையில் சென்றிருந்தவர்களில் 74 சிப்பாய்கள் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 97 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனைய 123 பேரும் வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். நேற்று (நேற்றுமுன்தினம்) 61 கடற்படையினரும், இன்று (நேற்று) மாலை 6 மணி வரை 16 கடற்படையினரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்"- என்றார். (த-22)

## கொரோனா...

தேரர் மற்றும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோரை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேற்றுச் சந்தித்தார்.

அதன்போதே பேராயர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். அர்த்தமற்ற, அதிக செலவுகொண்ட தேர்தல் பரப்புரை முறைமையை மாற்றுவது குறித்து தானும் கவனம் செலுத்தியுள்ளேன் என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

இது தொடர்பில் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொவிட் 19 நோய்த்தொற்று குறித்த தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்த தம்மாலங்கார மகாநாயக்க தேரரும், ஆண்டகையும் வைரஸைக் கட்டுப்படுத்தி மக்களைப் பாதுகாப்பதற்கு ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களைப் பாராட்டினர்.

நோய்த்தொற்றை விரைவில் கட்டுப்படுத்த முடியும் என்று சமயத் தலைவர்கள் இருவரும் நம்பிக்கை தெரிவித்தனர். விரைவில் ஊரடங்கைத் தளர்த்தக்கூடியதாயிருக்கும் என்று சமயத் தலைவர்களிடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் குறித்து கேட்டறிந்த மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னால் உள்ளவர்களைக் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். தற்கொலைத் தாக்குதலின் மூலம் மரணத்தையும் கடந்த நோக்கங்கள் உள்ளதென குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்த நோக்கங்களின் பின்னால் உள்ளவர்களைக் கண்டறிய அரசு முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

விவசாயப் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டுவரும் பிரதேசங்களில் குளங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைமைகள் அழிவடைந்து வருகின்றன என்று தம்மாலங்கார மகாநாயக்க தேரர் குறிப்பிட்டார். அவற்றைத் திருத்தியமைப்பதற்காக அடுத்த வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்வதாக ஜனாதிபதி தெரிவித்தார். (க)

## உண்மை...

ரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் நிலைமையில் பல்கலைக் கழகங்களின் நிலை தொடர்பில் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் இணைய வழியிலான கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் 15 பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தினர், மருத்துவத்துறையினர், படை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர். இதன்போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

நாட்டில் கொரோனா அச்சம் ஏற்பட்டதன் பின்னர் மருத்துவர்களும் படையினரும் கொரோனா தொடர்பில் கருத்துரைக்கின்றனரேயன்றி மருத்துவத் துறையின் விரிவுரையாளர்கள் மற்றும் அதன் நிபுணத்துவம் கொண்ட பேராசிரியர்கள் இது தொடர்பில் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இதன் காரணமாக குறித்த துறையினரும் உண்மை நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று அமைச்சின் செயலாளர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, இலங்கையின் 4 பல்கலைக் கழகங்கள் தமது அபார முயற்சியால் கொவிட் 19 பரிசோதனையில் ஈடுபடுகின்றன என்றும் செயலாளர் அதன்போது குறிப்பிட்டார்.

இதுதவிர, நாட்டின் 15 பல்கலைக் கழகங்களிலுமுள்ள விடுதிகளில் எத்தனை அறைகள் கொண்ட வசதிகள் உள்ளன என்ற விவரத்தையும் அவர் கோரியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-105)

## எலிக்...

எலிக் காய்ச்சல் நோயும் தலைதூக்கி வருகின்றது எனச் சுகாதாரத்துறையினர் கவலை தெரிவித்துள்ளனர்.

எலிக்காய்ச்சல் காரணமாக வெலிசறை கடற்படை முகாம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர் ஒருவர் கடந்த 25ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இந்த நிலையில் எலிக்காய்ச்சல் நிலைமை குறித்து, சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தகவல்களின் அடிப்படையில், இந்தவருடத்தில் இதுவரை 1,352 எலிக்காய்ச்சல் தொற்றாளர்கள் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

எலிக்காய்ச்சலால் கடந்த ஜனவரி மாதம் 665 தொற்றாளர்களும், பெப்ரவரி மாதம் 453 தொற்றாளர்களும், மார்ச் மாதம் 188 தொற்றாளர்களும், ஏப்ரல் மாதத்தில் இதுவரை 45 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் அதிகமான எலிக்காய்ச்சல் தொற்றாளர்கள் இந்தவருடம் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர். அங்கு மட்டும் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள எலிக்காய்ச்சல் தொற்றாளர்கள் எண்ணிக்கை 273 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

## 9ஏ...

சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகி இருந்தன. குறித்த மாணவி தனக்கு 9 பாடங்களிலும் 'ஏ' சித்தி கிடைக்கும் என நம்பியிருந்தபோதும், பெறுபேறு அவ்வாறு அமையவில்லை. எனினும் சகல பாடங்களும் அவர் சித்தியடைந்திருந்தார். இந்த நிலையிலேயே குறித்த மாணவி தற்கொலை செய்துகொண்டுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றார்கள். சடலம் மீட்கப்பட்டு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (ப-19)

## 619...

அதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 588 இலிருந்து 619 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் 65 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர். இதுவே ஒரே நாளில் இலங்கையில் பதிவான ஆகக் கூடுதலான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட எண்ணிக்கையாக அமைகின்றது. இந்தநிலையில் நேற்று 31 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இதுவரை 134 பேர் தொற்றிலிருந்து முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

தற்போது 478 நோயாளிகள் 7 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 152 பேர் கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு மருத்துவமனையிலும், 60 பேர் வெலிகந்தை ஆதார மருத்துவமனையிலும், 67 பேர் முல்லேரியா ஆதார மருத்துவமனையிலும், 21 பேர் இரணவில மருத்துவமனையிலும், 55 பேர் காத்தான்குடி ஆதார மருத்துவமனையிலும், 07 பேர் மினுவாங்கொடை ஆதார மருத்துவமனையிலும், 116 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, மேலும் 317 பேர் 31 மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## கொரோனா...

தீவிரமாகிய நிலையில் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவருக்கு நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதியானது. இதனால் அவரின் சடலம் உடஹமுல்ல பொது மயானத்தில் நேற்றுத் தகனம் செய்யப்பட்டுள்ளது.

அவர் வசித்த பிலியந்தலை, சித்தமுல்ல பகுதியில் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (எ-22)

## இரட்டையர்களுக்கு...

சேர்ந்த இரட்டையர்கள் 9ஏ சித்தி பெற்றுள்ளனர். குகராஜா சாத்வீகன், குகராஜா சாரணியன் ஆகிய இரட்டையர்களே இந்தப் பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

17அகவைப்பிரிவு துடுப்பாட்ட அணியின் சிறந்தவீரர்களாக வலம் வந்துகொண்டு பலவெற்றிகளுக்கு காரணமாக அவர்கள் இருந்தார்கள் என்று தெரிவித்த பாடசாலைச் சமூகத்தினர், அவர்களுடன் அந்தப் பாடசாலையில் '9ஏ' சித்திபெற்ற புஸ்பாகரன் குபேரன் என்னும் மாணவனையும் பாராட்டியுள்ளனர். (ப-222)

## வடக்கில்...

எனர்.

அத்துடன், தேசிய மட்டத்தில் சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய 5 லட்சத்து 56 ஆயிரத்து 256 மாணவர்களுள் 8 ஆயிரத்து 386 பேர் 9 பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

9 பாடங்களிலும் சித்தியடைய தவறிய மாணவர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் வருமாறு.

நுவரெலியா 285
கண்டி 428
மாத்தளை 232
பதுளை 351
மொனராகலை 278
இரத்தினபுரி 406
கேகாலை 235
கொழும்பு 705
கம்பஹா 631
களுத்துறை 493
மட்டக்களப்பு 162
திருகோணமலை 240
அம்பாறை 200
பொலன்னறுவை 185
அநுராதபுரம் 453
புத்தளம் 224
குருணாகலை 448
காலி 321
மாத்தறை 168
அம்பாந்தோட்டை 124. என்று திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை, 2018ஆம் ஆண்டு டிசெம்பரில் முதற்தடவையாகத் தோற்றியோரில் வடக்கில் 425 பேரும் நாடு முழுவதும் 5ஆயிரத்து 917 பேரும் இந்தப் பரீட்சையில் சித்தியடையத் தவறியிருந்தனர் என்று திணைக்களம் மேலும் தெரிவித்தது. (த-44)

# 1200 பி.சி.ஆர் பரிசோதனை தினமும் நடத்தும் திறனுண்டு

### சுகாதார பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 29

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டறிய, அன்றாடம் ஆயிரத்து 200 பி.சி.ஆர். சோதனைகளை நடத்தும் திறன் தற்போது இலங்கைக்கு உள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் பெரதெனியா, கொழும்பு மற்றும் களனி பல்கலைக்கழகங்களின் ஆய்வகங்களில் பி.சி.ஆர். சோதனைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை வெலிசர கடற்படை முகாமில் நேற்றுப் படையினரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளின் மற்றொரு தொகுப்பு முடிவுகள் இன்று வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (த)

# மத மாற்றத்துக்கு விசாரணை தேவை

### மறவன்புலவு சச்சிதானந்தன் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப்.29**

**வடக்கில் மதமாற்றத்தில் ஈடுபடும் சபையினருக்கு எதிராக விசேட ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என சிவசேனா அமைப்பினை சேர்ந்த மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ். அரியாலையில் உள்ள பில்தெனியா ஆலயத்திற்கு முன்னால் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கில் மதமாற்ற சபைகள் நிறைந்து காணப்படுகின்றன அவை எந்த சட்டத்திற்கு உட்பட்டு செயற்படுகின்றன என்பது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் இந்த பில்தெனியா ஆலயமானது ஒரு வயல் காணியில் அமைக்கப்பட்டுள்ளது அதற்கு யார் அனுமதி கொடுத்தது நல்லூர் பிரதேச சபை என்றால் அதனை நிர்வகிப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே இந்த மத மாற்றத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் சுமந்திரன் போன்றவர்கள் உள்ள கட்சியினர்தான் இந்த ஆலயம் அமைப்பதற்கு அனுமதி கொடுத்துள்ளார்கள் எனவே இது தொடர்பில் விசேட ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்- என்றார். (ஐ)

# கரந்தெல்லவால் ரூ.150 லட்சம் சேமிப்பு

கொழும்பு, ஏப். 29

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்படும் கரந்தகொல்ல நீர்மின் திட்டத்தின் பணிகள் இன்னும் ஆறு மாதங்களுக்குள் நிறைவடையும். அதன்பின்னர் இலங்கை மின்சார சபைக்கு நாளொன்றுக்கு ஒன்றரை கோடி ரூபாவை சேமிக்கக்கூடியதாக இருக்கும் என்று போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

எல்ல, கரந்தகொல்ல நீர்மின் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை அவதானிக்கும் நோக்கில் அமைச்சர் நேற்று கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உமாஓயா மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக 120 மெகாவாட் மின்சாரம் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளது. எனவே, இந்தத் திட்டம் முடிவடைந்த பின்னர் இலங்கை மின்சார சபைக்கு நாளொன்றுக்கு 150 லட்சம் ரூபாவை (ஒன்றரை கோடி) சேமிக்கக்கூடியதாக இருக்கும்.

முன்கூட்டியே திட்டமிட்டிருந்த கால எல்லைக்குள் திட்டம் நிறைவுபெற வில்லை. பல தடைகள் ஏற்பட்டன. அவற்றுக்கு தற்போது தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, திட்டத்தை விரைந்து முடிக்கவேண்டியுள்ளது. இதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் முழு ஆதரவையும் வழங்கியுள்ளனர். மேற்படி திட்டம் பற்றி அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளேன்.

தேர்தலை இலக்கு வைத்து நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தவில்லை. இதன் பணிகள் நிறைவுபெறுவதற்கு இன்னும் 6 மாதங்களாவது செல்லும் என கூறப்படுகின்றது. ஆனால், அதற்கு முன்னர் நிறைவு செய்வதே எமது எதிர்பார்ப்பாகும்' - என்றார். (ம-44)

## தனியார் நிறுவனங்களின் விவரங்கள் சேகரிப்பு

கொழும்பு, ஏப்.29

கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக வணிக ரீதியாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ள தனியார்துறை சார்ந்த நிறுவனங்களின் விவரங்களை அறியத்தருமாறு கோரப்பட்டுள்ளது.

கொரோனா தாக்கம் காரணமாக நாட்டில் அனைத்து மக்களும், பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். மக்களை அந்தப் பாதிப்பிலிருந்து மீட்டெடுக்கும் வகையில், அரசு உதவிகளையும், கொடுப்பனவுகளையும் வழங்கிவருகிறது. இந்த நிலையில் அதில் ஒரு கட்டமாக கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக வணிக ரீதியாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ள தனியார்துறை சார்ந்த நிறுவனங்களின் விபரங்களை அறியத்தருமாறு தொழில் ஆணையாளர் நாயகத்தின் கையெழுத்துடனான அறிவித்தல் ஒன்று அரச தகவல் திணைக்களத்தின் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளது. (ப)

## அடித்துக் கொலை

இபலோகம, சேனபுர பிரதேசத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்ற பொலிஸார் தெரிவித்தனர். கடந்த திங்கட்கிழமை மாலை காணி சம்பந்தமான தகராறு நீண்டுகொண்டு சென்றதன் காரணமாக, கூரிய ஆயுதமொன்றால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலில் படுகாயமடைந்தவர் சேனபுர மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே கொல்லப்பட்டார். சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணை தொடர்கின்றது என்று மேலும் தெரிவித்தனர். (த)

## 164 மாணவர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு,ஏப்.29

கொரோனா வைரஸ் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால், இந்தியாவின் பெங்களூரில் சிக்கித் தவித்த 164 இலங்கை மாணவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தனர்.

இந்தியாவின் பெங்களூர் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல் 1422 என்ற விமானம் மூலம் மாணவர்கள் அனைவரும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். அழைத்து வரப்பட்ட மாணவர்கள் விமான நிலையத்தில் கிருமி நீக்கம் செய்யப்பட்டு கொவிட்19 அறிகுறிகள் உள்ளதா என்று சோதனைக்குட்படுத்தப்பட்டதன் பின்னர், சிறப்பு பஸ்களில் இராணுவத்தினரால் தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (க)

# கொரோனாவிலிருந்து மீண்டவர்கள் வேலைக்கு உடனே செல்லக்கூடாது

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 29

கொரோனா வைரஸ் பாதித்து மீண்டவர்கள் வேலைக்குச் செல்ல அனுமதி வழங்கும் யோசனைக்கு எதிராக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் 210 நாடுகளில் கால் பதித்து தனது ஆதிக்கத்தை பரப்பி வருகிறது. இந்த வைரசின் பிடியில் உலகம் முழுவதும் 28 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 7 இலட்சத்து 89 ஆயிரம் பேர் தீவிர சிகிச்சைக்கு பின்னர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். அவர்கள் சில நாள்கள் ஓய்வுக்கு பின்னர் மீண்டும் வழக்கம்போல பணிக்கு திரும்பிவிடும் யோசனையில் உள்ளனர். அவர்களுக்கு கொரோனா வைரஸ் தாக்கியதற்காக அளித்த சிகிச்சையின்போது உடலில் தேவையான அளவுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உருவாகி இருக்கும் என்ற கருத்து இருக்கிறது. ஆனால் அவர்களை கொரோனா வைரஸ் மீண்டும் தாக்காது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இது குறித்து ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

இந்தநிலையில் இம்யுனிட்டி பாஸ்போர்ட் என்ற பெயரில் நோய் எதிர்ப்பு சக்தி சான்றிதழ் வழங்கி கொரோனாவில் இருந்து மீண்டு வந்தவர்களை பணிக்கு திரும்பச் செல்ல வைக்கலாம் என்ற யோசனைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் எதிர்ப்பு தெரிவித்து எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் கூறியிருப்பதாவது:

கொரோனா வைரஸ் பாதித்து மீண்டவர்கள் இரண்டாவது முறையாக அந்த தொற்றுநோயிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். அவர்கள் உடலில் போதுமான நோய் எதிர்ப்பு சக்தி இருக்கிறது என்பதற்கு தற்போது ஆதாரம் இல்லை. இதுதொடர்பாக கூடுதல் ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் சான்றிதழ் வழங்கி நோய் எதிர்ப்பு சக்தியின் துல்லியத்தை உறுதிப்படுத்த முடியாது. அப்படி நோய் எதிர்ப்புச்சக்தி சான்றிதழ் அளித்தால் கொரோனா வைரஸ் தொற்று பரவும் அபாயங்கள் மேலும் கூடும். புதிய கொரோனா வைரசுக்கான நோய் எதிர்ப்புச்சக்தி பற்றி இன்னும் சரிபார்ப்புகள் மதிப்பீடுகள் தேவைப்படுகின்றன. அதன் பின்னர்தான் நோய் எதிர்ப்புச்சக்தியின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை தீர்மானிக்க முடியும் என்று தெரிவித்துள்ளது. (த)



# உள்ளூர் துப்பாக்கியுடன் தந்தையும் மகனும் கைது

மன்னார், ஏப்.29

சட்டவிரோதமாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் தந்தையும், மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய குஞ்சுகுளம் கிராமத்தில் வைத்து நேற்று முன்தின மிரவு இருவரும் கைது செய்யப்பட்டனர்.

25 வயதுடைய மகனும்,50 வயதுடைய தந்தையுமே மடுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகளை மடு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிரோஷன் பி.எஸ்.செனவிரெத்ன, ஜெயவர்த் தன, திசநாயக்க, விதுஷான், பிரியதர்சன் போன்றோர் மேற்கொண்டனர். சந்தேக நபர்களை மன்னார் நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதாகப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஜ-213)

# கடற்படை மீது குற்றமில்லை!

## பிமல் ரத்நாயக தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 29**

**நாடளாவிய ரீதியில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நிலை தொடர்பில் கடற்படையினர் மீது குற்றஞ்சாட்டும் வகையில் முன்வைக்கப்பட்டு வரும் கருத்துக்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.**

கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராகப் போராடுவதற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்ற 'மக்கள் மத்தியிலான ஒருமைப்பாடு' என்ற ஆயுதத்தை வலுப்படுத்துவதற்கு முயற்சிப்போம் என்றும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராகப் போராட வேண்டுமாக இருந்தால், அதற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்ற ஆயுதம் மக்கள் மத்தியிலான ஒருமைப்பாடேயாகும். முதலில் அதனைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிப்போம். வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உட்பட பல்வேறு தரப்பினரும் கடற்படையினர் தொற்றுக்கு உள்ளாகியமையால் நாட்டில் வைரஸ் தொற்றுப்பரவல் அச்சம் அதிகரித்திருப்பதாக கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே அத்தகைய கருத்துக்களுக்குக் கண்டனம் வெளியிடும் வகையில் பிமல் ரத்நாயக மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

முதலில் சீனர்கள் வெறுக்கப்பட்டார்கள். பின்னர் தென்கொரியா மற்றும் இத்தாலியில் பணியாற்றும் இலங்கைப் பிரஜைகளும், அவர்களைத் தொடர்ந்து முஸ்லிம்களும் வெறுக்கப்பட்டார்கள். தற்போது கடற்படையினர் மீது வெறுப்பு உமிழப்படுகிறது. எத்தகையதொரு பாதிப்படைந்த சமுதாயமாக நாம் இருக்கிறோம்?. எந்தவொரு நாடும் கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராகப் போராட வேண்டுமாக இருந்தால், அதற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்ற ஆயுதம் மக்கள் மத்தியிலான ஒருமைப்பாடேயாகும். முதலில் அதனைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிப்போம் என்றுள்ளார். (ப)

# தனிமைப்படுத்தல் வேறு இடைத்தங்கல் வேறு!

*முல்லைத்தீவு சுகாதாரப் பணிப்பாளர் விளக்கம்*

கொழும்பு, ஏப்.29

தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் இடைத்தங்கல் நிலையங்களுக்கும் இடையேயான வித்தியாசங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று முல்லைத் தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது தொற்றுள்ளவருடன் தொடர்புபட்டவர்கள் மற்றும் தொற்று இருக்க அதிக வாய்ப்புள்ளவர்கள் கவனிக்கப்படுகின்றார்கள். இடைத்தங்கல் நிலையங்களில் விடுமுறையின் பின்னர் வருபவர்கள் ஏதேனும் நோய் அறிகுறிகள் தென்படுகிறதா என அவதானிப்பதற்காகத் தங்க வைக்கப்படுவர். இனிவரும் நாள்களில் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் இடைத் தங்கல் அவதானிப்பு நிலையங்கள் தேவைப்படும். சில சந்தர்ப்பங்களில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இது தேவைப்படலாம். இதற்காகப் பாடசாலைகள் மட்டுமல்ல உங்கள் பக்கத்து வீடுகளும் பாவிக்கப்படும்.

நீங்கள் எப்பொழுதும் சமூக மற்றும் பௌதீக இடைவெளிகளைப் பேணுவதுடன் சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் முறையாகப் பின்பற்றினால் நோய்த்தாக்கத்தில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றார். (ப-19)

# திருத்துநராக வந்த திருடன்!

மட்டக்களப்பு, ஏப்.29

குளிர்சாதனப் பெட்டி திருத்துநர் போன்று பாசாங்கு செய்த நபரொருவர், வர்த்தக நிலையமொன்றில் இருந்த பணத்தைத் திருடிச் சென்றார். இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீராவோடையில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் நடந்துள்ளது.

வர்த்தக நிலைய உரிமையாளர் தன்னுடைய குளிர்சாதனப் பெட்டி பழுதடைந்துள்ள சம்பவத்தைக் கடைக்கு வந்த நபர்களிடம் கூறியுள்ளார். அதை ஏதோவொரு வகையில் அறிந்து கொண்ட நபரொருவர் குளிர்சாதனப்பெட்டி திருத்துநர் போன்று வருகை தந்து, பணத்தோடு இருந்த தேசிய அடையாள அட்டை, வாக்காளர் இடாப்பு ஆகியவற்றையும் திருடிச் சென்றுள்ளார்.

இந்த நபர் முகக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்தார் என்று பாதிக்கப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவம் நடந்த வர்த்தக நிலையத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க150)



# நாட்டுக்கூத்தின் மூலமாக கொரோனா விழிப்புணர்வு

காரைதீவு, ஏப்.29

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் பரம்பலுக்கு எதிரான விழிப்பூட்டல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாட்டுக் கூத்து கலையை முன்னிறுத்தி காரைதீவு, மண்டூர், நாவிதன்வெளி ஆகிய இடங்களை சேர்ந்த இளையோர்களின் கூட்டு முயற்சியாக 'இல்லறச் சிறையில்' என்கிற காணொலி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுது.

ஜனாதிபதி விருது வென்ற காரைதீவைச் சேர்ந்த நாட்டுக்கூத்து கலைஞர் குணசேகரம் சுரேஸ்குமார், இந்தியாவின் தமிழ்நாட்டு அறிஞர்களால் கவி வித்தகர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட காரைதீவை சேர்ந்த கவிஞர் காரையன் கதன், மண்டூரை சேர்ந்த இசையமைப்பாளர் பாடகர் டினேஸ் , நாவிதன்வெளியை சேர்ந்த நாட்டிய தாரகை பிரணிதா தேவகுமார் உள்ளிட்ட கலைஞர்கள் அவரவர் துறை சார்ந்த பங்களிப்புகளை இதற்கு வழங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-114)

# 'கடன் நிவரணம் 2020' நம்பி ஏமாறாதீர்

கொழும்பு, ஏப். 29

இலங்கை கடன் தகவல் பணியகத்தால், "கடன் நிவரணம் 2020" திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக பகிரப்படும் குறுந்தகவல்கள் பொய்யானவை என்றும், அதனை நம்பி தகவல்களைப் பகிர்வதைத் தவிர்க்குமாறும் இலங்கையின் கணினிசார் அவசர தகவல் வழங்கல் பிரிவு எச்சரித்துள்ளது.

இது குறித்து இலங்கையின் கணினிசார் அவசர தகவல் வழங்கல் பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது;

இலங்கையின் கடன் தகவல், பணியகத்தால் வெளியிடப்படுவது போன்று 'கடன் நிவாரணம் 2020' (Naya Sahana 2020) என்று வட்ஸப் ஊடாகப் பொய்யான தகவல் கூகிள் டொக் (Google doc) பிஷிங் (Phishing) தாக்குதல் மூலம் பரவி வருகிறது. அத்தகைய அறிவிப்புக்கள் எதனையும் தாம் வெளியிடவில்லை என்று இலங்கை கடன் தகவல் பணியகம் பொதுமக்களை எச்சரித்திருக்கிறது. எனவே அத்தகைய வட்ஸப் குறுந்த கவல்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அந்த கூகிள் ஆவணத்தில் தகவல்களைப் பகிர்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மாதனமுத்தவின் வாரிசுகள்

தனவந்தர் ஒருவர் ஆசையாக வளர்த்துவந்த பசுக்கன்று, தண்ணீர் குடிக்கும் போது அதன் கழுத்து மண் பானைக்குள் சிக்கிவிட்டது. எவ்வளவு முயன்றும் எடுக்கமுடியவில்லை. தனவந்தரின் அத்தனை வேலையாள்களும் அந்தப் பானையில் இருந்து கன்றை விடுவிக்கப் போராடியும் பயனேதுமில்லை. கடைசியாக அவ்வூரின் அதிபுத்திசாலியான மாதனமுத்த என்பவரை அழைப்பதென முடிவாயிற்று.

மாதனமுத்தவும் தனவந்தரின் அழைப்பையேற்று அங்கு வந்தார். ஆனால் மாதனமுத்தவின் வாகனமான யானை தனவந்தரின் வீட்டுக்குள் புகமுடியவில்லை. காரணம், அவர் வீட்டு வாசல் யானை போகக்கூடியளவு விசாலமல்ல. என்ன செய்யலாம் என தனவந்தர் யோசிப்பதற்கிடையில் , "இடியுங்கள் மதிலை" என்று உத்தரவிட்டு, அப்படி உடைக்கப்பட்ட மதில் வழியாக மாதனமுத்த உள்ளே வந்தும் விட்டார். வந்தவர் கன்றைப் பார்த்தார்.

" என்ன பிரச்சினை?" என்று தனவந்தரைக் கேட்டார். தனவந்தர் நடந்ததைச் சொல்லிவிட்டு,

" எப்படியாவது கன்றின் கழுத்தில் இருந்து பானையை எடுத்து விடுங்கள்" என்று கெஞ்சினார்.

"அவ்வளவுதானே, இப்போதே பானை வேறும் கன்று வேறாக்குகிறேன்" என்று சொல்லிக் கொண்டே , தன்னிடமிருந்த வாளால் கன்றின் கழுத்த வெட்டினார். இப்போது மாதனமுத்த சொன்னது போல, கன்று வேறு, பானை வேறாகி விட்டன.

தனவந்தருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"என்ன நண்பரே, சொன்னபடி செய்துவிட்டனே, இனியும் என்ன யோசனை?" என்று மாதனமுத்த கேட்டார்.

"இல்லை, இன்னமும் கன்றின் கழுத்து பானைக்குள் தானே..?" என்று தனவந்தர் சமாளிக்கப்பார்த்தார்.

உடனேயே " இதென்ன பிரமாதம், இப்போதே எடுத்து விடுகிறேன்" என்று கூறி, மண்பானையை உடைத்தார். இப்போது கன்றின் தலை வெளியே வந்துவிட்டது. வெற்றிபெருமிதத்தோடு தன் அறிவுக்கூர்மையைத் தானே வியந்தவாறு வெளியேறினார் மாதனமுத்த. தனவந்தரோ கன்றையும் இழந்து, மதிலையும் இடித்து, பானையும் உடைந்த கவலையில் படுத்த படுக்கையாகி விட்டார்.

இப்படி தன்னை அதிபுத்திசாலியாகக் காட்டிக் கொள்ள நினைத்து, அதனால் கேலிக்குரியவராக மாறும் 'மாதனமுத்த'வின் கதைகள் சிங்களமொழியில் வெகு பிரபலம். இந்த மாதனமுத்த கற்பனையில் மட்டுமல்லாது அவ்வப்போது நிஜத்திலும் ஆட்சியாளர்களின் ரூபங்களில் வெளிப்படுவதுண்டு. இப்போது கோத்தா அரசு, கொரோனா காலத்தில் செய்கின்ற அநேக காரியங்கள் மாதனமுத்தவையும் மிஞ்சும் வகையிலேயே இருக்கின்றன, அதற்கு சமீபத்திய உதாரணம் தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கங்களின் ஒழுங்கில் மக்களின் நடமாட்டத்துக்கு அனுமதி வழங்கும் செயற்பாடு.

இந்தத் தேசிய அடையாள அட்டை மூலம் நடமாட அனுமதி வழங்கும் அறிவிப்பு செய்தபோதே, இது ஊரடங்கு நடைமுறையில் உள்ள பகுதிக்கா, ஊரடங்கு இல்லாத பகுதிக்கா என்ற குழப்பம் தலைதூக்கிவிட்டது. அதுதொடர்பில் குறித்த அறிவிப்பை விடுத்த ஜனாதிபதி செயலணியிடம் விளக்கம் கேட்டபோது, " ஊரடங்கு உள்ள பகுதிகளுக்கு மட்டுமே இந்த நடைமுறை" என்று தெளிவுபடுத்தினார்கள்.

ஆனால் அந்தத் தெளிவு விடிந்ததும் பறந்துவிட்டது. " தேசிய அடையாள அட்டை இலக்க ஒழுங்கில் நடமாட அனுமதிக்கும் திட்டம் நாடு முழுதுக்கும் பொருந்தும்" என பொலிஸ் தரப்பு அடுத்த நாள் சொன்னது. இப்படி முதல் கோணலே முற்றும் கோணலாகி விட, இப்போது இந்தத் திட்டம் கொரோனா பரவவே வழி செய்யும் என்று சுகாதாரத் துறையும் விசனம் வெளியிட்டுள்ளது.

ஏனெனில் கொரோனாத் தொற்றைத் தவிர்க்கும் வகையில் ஊரடங்கற்ற காலத்தில் கூட அத்தியாவசிய தேவைக்காக வீட்டில் உள்ள ஒருவர் மட்டும் வெளியே செல்வதே பொருத்தமானது என சுகாதாரத் துறை அறிவித்திருந்தது. ஏனெனில் வெளியில் சென்றுவரும் அந்த ஒருவர் தன்னில் மிகக் கவனமாக இருந்தால் தொற்றைத் தவிர்க்கலாம். அதையும் மீறி , கொரோனாத் தொற்று ஏற்பட்டாலும் அவரையும், அவர் சார்ந்தோரையும் மட்டும் தனிமைப்படுத்துவதனூடாக அதன் பரவலைத் துண்டிக்க முடியும். ஆனால் இப்போது அடையாள அட்டை இலக்க ஒழுங்குமுறைப்படி நடமாடுவதாயின் வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் , வேறு வேறு நாள்களில் வீட்டை விட்டு வெளியில் பயணிக்க வேண்டியிருக்கும். இதனால் அவர்களின் தொடர்பாடல் வட்டம் பெரிதாகி, கொரோனா பரவும் வாய்ப்பும் அதிகரிக்கிறது. இதுவே சுகாதாரத் துறையின் அர்த்தமுள்ள குற்றச்சாட்டு. மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதாக நினைத்து , கொரோனா பரவும் வாய்ப்பை அதிகரித்து மாதனமுத்தவின் வாரிசுகள் என்பதை அரச தரப்பு நிரூபித்திருக்கிறது.

இப்படியான பின்விளைவுகளை யோசிக்காத திட்டங்கள் எங்கே கொண்டு சென்றுவிடுமோ என்ற அச்சமே இப்போது எல்லோரிடமும். அரசின் இந்த பித்துக்குளித்தனங்களை கணக்கெடுக்காது, சுகாதாரத்துறையின் அறிவுறுத்தலின்படி நடப்பதே நமக்கும், நம்மைச் சூழ உள்ளோருக்கும், நாட்டுக்கும் பாதுகாப்பு என்பதை அனைவரும் உணரவேண்டும்.

# இலங்கையால் ஐ.நா. கவலை

கொழும்பு,ஏப்.29

**கொரோனா வைரஸ் காரணமாக பல்வேறு நாடுகளில் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பொலிஸார் மக்களைக் கைது செய்துள்ளமை மற்றும் தடுத்து வைத்தமை கவலையளிப்பதாக் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பெச்சலெட் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, சில நாடுகளில் பொது மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மக்களைக் கட்டுப்படுத்துவதற்கும், வேறுப்பட்ட கருத்துக்களைத் தணிப்பதற்கும் அவசர காலப்பகுதியில் உள்ள அதிகாரத்தை, அரசாங்கங்கள் ஆயுதங்கள் மூலம் பயன்படுத்தக் கூடாது.

சர்வதே ரீதியில் சுமார் 80 நாடுகளில் அவசரகால நிலை அல்லது ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 15 நாடுகள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. நைஜீரியா, கென்யா, தென்னாபிரிக்கா, பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகள் இதில் உள்ளடங்கும்- என்றுள்ளது. (க)

# இராணுவம், பொலிஸாருக்கு கொழும்பில் பாடசாலைகள்

கொழும்பு, ஏப்.29

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினரின், நடவடிக்கைகளுக்காக கொழும்பின் பல முன்னணி பாடசாலைகள் கையேற்கப்பட்டுள்ளன.

விடுமுறைகளுக்கு சென்று திரும்பும், விடுமுறைகளில் செல்ல உள்ள இராணுவத்தினர் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் தங்குவதற்கும் மேலதிக படையினரின் நடவடிக்கைகளுக்காக எனக் கூறியே இந்தப் பாடசாலைகள், கல்வி அமைச்சிடம் கோரப்பட்டிருந்தன என்று கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

கொழும்பு, ரோயல் கல்லூரி, தேர்ஸ்டன் கல்லூரி, டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, மஹனாம கல்லூரி, பத்தரமுல்ல சுபூத்தி வித்தியாலயம், கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயம் உள்ளிட்ட பிரதான பாடசாலைகளே இவ்வாறு பாதுகாப்புத் தரப்பினரின் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளன. கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு பாடசாலைகள் கோரப்பட்டால், அவற்றை வழங்குமாறு அதிபர்களுக்கு கல்வி அமைச்சு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது. (ஐ)







# வவுனியாவில் சுகாதார பரிசோதகர்கள் களத்தில்

வவுனியா, ஏப். 29

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றையடுத்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் வவுனியா மாவட்டத்தில் நேற்றுக்காலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை 15 மணிநேரம் தளர்த்தப்பட்ட நிலையிலும் வீதியோரங்களில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை கண்காணிக்கும் நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுப் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் வீதியோரங்களில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவர்கள் முகக்கவசம் கட்டாயம் அணிந்திருப்பதுடன் மரக்கறிகள் சுகாதார முறையில் விற்பனை செய்கிறார்களா? என்பன தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண்காணித்தனர்.

இதன்போது முகக்கவசம் அணியாது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டதுடன் அவர்களுக்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் தடை விதிக்கப்பட்டது. (ப-110,18)

# ஊரடங்கை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துங்கள்

## பச்சிலைப்பள்ளி தவிசாளர் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.29

**ஊரடங்கைத் தளர்த்தாது இன்னும் சில நாள்களுக்கு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கொவிட் 19 தொடர்பான விசேட அமர்வு நேற்று முன்தினம் பச்சிலைப்பள்ளி பிதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
இன்று எமது நாடு மட்டுமல்ல உலகமே கொவிட்19 தொற்றால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் பல வல்லரசுகள் கூட பின்னோக்கி நகர்ந்துள்ளன. நாம் எமது மக்களுக்கு தொடர்சியான விழிப்புணர்வுகளை வழங்க வேண்டும். இதுவரை எமது மாவட்டத்தில் எதுவித தொற்றாளர்களும் அடையாளம் காணப்படவில்லை இதனை நாம் தொடரவேண்டும். ஊரடங்கு தளர்த்தப்படுவது சிறப்பான விடயம் அல்ல ஊரடங்கை தளர்த்தாது வைத்திருக்க வேண்டும் இந்த விடயத்தில் ஆட்சியில் உள்ள அரசை நாம் கேட்டுக்கொள்வது ஊரடங்கைத் தளர்த்தாது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி அவர்களைப் பாதுக்காக்க வேண்டும். தேர்தலை நடத்துவதற்காக இவ்வாறு ஊரடங்கை அவசரப்பட்டு இந்த அரசு தளர்த்துகின்றதா என சந்தேகம் எழுந்துள்ளது என்றார்.

கூட்டத்தில் ஆனைத்துக் கட்சி சார்ந்த உறுப்பினர்களும் தொடர்சியாக மக்களுக்கு வழங்கப்படும் உதவித் திட்டங்களுக்கு தமது ஆதரவை ழங்குவதாக தெரிவித்ததுடன் தவிசாளரின் செய்றபாடு பாராட்டத்தக்கது எனவும் ஏனைய கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர். (ப-6)

# வவுனியா நீதிமன்றம் விடுத்துள்ள அறிவித்தல்

வவுனியா,ஏப்.29

நாட்டில் கொரோனா தொற்று தீவிரம் அடைந்ததையடுத்து நீதி மன்றத்துக்கு வருகை தருபவர்களுக்கு வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் முக்கிய அறிவித்தல் விடுத்துள்ளார்.

அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அழைக்கப்படும் வழக்குகள் (Calling Cases) காலை 9 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் விளக்க வழக்குகள் (Trial Cases) நண்பகல் 1மணி தொடக்கம் 3 மணி வரையும் இடம்பெறும்.

அத்துடன் நீதிமன்றுக்கு வருகை தரும் சகலரும் முகக்கவசம் அணிந்து வரவேண்டும். நீதிமன்றுக்கு வருகின்ற அனைவரும் தங்களது கைகளை நன்றாகக் கழுவிய பின்னர் (உரிய ஏற்பாடுகள் நீதிமன்ற வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது) நீதிமன்ற உத்தியோகத்தரின் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரின் அறிவுறுத்தலைப் பின்பற்றி ஒதுக்கப்பட்ட இடங்களில் உரிய இடைவெளிவிட்டு நிற்க வேண்டும்.

திறந்த நீதிமன்றத்தில் ஒரு தடவையில் 10 வழக்குகளுடன் தொடர்புடைய நபர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர். அழைக்கப்படுகின்ற 10 வழக்குடன் தொடர்புடைய நபர்கள் மாத்திரம் உரிய இடைவெளியைப்பேணிதிறந்த நீதிமன்றுக்குள் சென்று அமைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளைப் பேணி நடக்க வேண்டும். நீதிமன்ற நடவடிக்கை முடிவடைந்த பின்னர் எக்காரணம் கொண்டும் தாமதிக்காது நீதிமன்ற வளாகத்தில் இருந்து வெளியேற வேண்டும். பொதுமக்கள் எவரும் சிற்றுண்டிச்சாலைக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நீதிமன்ற கட்டளைப்படி இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (க-18)

# சமூகத் தொற்றால் இலங்கைக்கு அபாயம்

கொழும்பு, ஏப்.29

பொது மக்கள் சுகாதார நடைமுறையைப் பின்பற்றி விழிப்புடன் செயற்படாதுவிட்டால் இன்னும் ஓரிரு நாள்களில் 'கொரோனா' வைரஸ் பரவல் 3பி என்ற நிலைக்கு (சமூகதொற்று) சென்றுவிடும் என்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்து, முதல் நான்கு நாள்களில் 100 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். அதன்பின்னர் அடுத்த நூறு வருவதற்கு 18 நாள்கள் எடுத்தன. ஆனால், தற்போது இரண்டு, மூன்று நாள்களுக்குள் 100 என்ற எண்ணிக்கை நெருங்கி விடுகின்றது.

எனவே, நோய் வேகமாகப் பரவக்கூடிய அச்சுறுத்தல் நிலை இருக்கின்றது என்பதை மக்கள் உணர வேண்டும். அரசு மற்றும் சுகாதார அமைச்சு தலையிட்டு எவ்வளவுதான் சட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும், மக்களின் முழுமையான ஒத்துழைப்பு இருக்கும் பட்சத்திலேயே வைரஸ் பரவலைக் கட்டுக்குள் கொண்டு வரமுடியும். ஏனெனில் மக்கள் தான் வைரஸ் தொற்றை சமூகத்துக்கு எடுத்துச் செல்கின்றனர்.

கொரோனா தொற்று 3பி என்ற நிலைக்குச் செல்வதை மக்கள் ஒத்துழைப்பு மூலமே தடுக்க முடியும். ஆகவே தமக்கான பொறுப்பை உணர்ந்து மக்கள் செயற்படவேண்டிய தருணம் இது என்பதை மீண்டும் நினைவூட்டுகின்றேன். அவ்வாறு இல்லாவிட்டால் இன்னும் ஓரிரு நாள்களில் சமூகத் தொற்று ஏற்பட்டுவிடும்.

கொரோனா பிரச்சினை இன்னும் ஒரு வாரத்துக்குள் முடிந்துவிடும் என இலங்கையாலும் அல்லது அபிவிருத்தியடைந்த நாடுகளாலும் கூட உறுதியாகக் கூற முடியாது. தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு அது பாவனைக்கு வருவதற்கு குறைந்தபட்சம் இன்னும் 6 மாதங்களாவது எடுக்கும்.

எனவே, சமூக இடைவெளி, சுய பாதுகாப்பு உட்பட சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் கடைப்பிடித்தால் கட்டம் கட்டமாக இயல்பு நிலைக்குத் திரும்பக் கூடியதாக இருக்கும்- என்றார். (க-44)



# குருதிக்கொடை முகாம்

கிளிநொச்சி,ஏப்.29

புஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் ஜெயந்தியை முன்னிட்டு கிளிநொச்சி சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

காலை 9 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை சின்மயா மிஷன் காரியாலயத்தில் குருதிக்கொடை முகாம் நடைபெற்றது. (ஐ)

# காலாவதியான உப்பு விற்பனை; வர்த்தகருக்கு எதிராக வழக்கு

சாவகச்சேரி.ஏப்.29

திகதி காலாவதியான உப்பு பைக்கற்றுக்களை நடமாடும் வாகனம் மூலம் விற்பனைக்கு கொண்டு சென்ற வர்த்தகருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட உணவுகள் மருந்துகள் பரிசோதகர்களும் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரும் இணைந்து நேற்று கொடிகாமம் பகுதியில் நடமாடும் மரக்கறிகள் மற்றும் பல்பொருள் விற்பனை வாகனங்களில் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பல்பொருள் விற்பனை வாகனத்தில் திகதி காலாவதியான உப்பு பைக்கற்றுக்களைக் கைப்பற்றினர்.

அத்துடன் வர்த்தகருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ-9)

# பொலிஸாரின் விமர்சனங்களை பொறுத்துக்கொள்ளவே முடியாது

## மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.29

ஊடக அதிகாரிகள் மீதான பொலிஸாரின் விமர்சனங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவர் தீபிகா உதகம தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தல் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியாகும் சில செய்திகள் தொடர்பில் இடம்பெறும் கைது நடவடிக்கைகள் சம்பந்தமாக அவர் பதில் பொலிஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது;
ஜனநாயகத்தில் கருத்துச் சுதந்திரம் மற்றும் பிற உரிமைகளை மட்டுப்படுத்த எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும், அவசர காலங்களில் கூட, சட்டத்தின் கட்டமைப்பிற்குள் இருக்க வேண்டும். கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் நோக்கத்துக்கு எதிரான செய்திகள் தடுக்கப்பட வேண்டும். எனினும் இதற்காக எவரும் கைது செய்யப்பட்டால் அந்த நடவடிக்கை பாகுபாடற்ற வகையில் இடம்பெற வேண்டும். இந்தக் கைதுகள் தன்னிச்சையாகவும், பாரபட்சமாகவும் அமையக்கூடாது. இதேவேளை தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் ஒரு விதி மீறப்பட்டால் மாத்திரமே ஒருவரைக் கைது செய்ய முடியும். எனினும் கைது நடவடிக்கைகள் எந்த விதிமுறையை மீறியமைக்காக மேற்கொள்ளப்படுகின்றன என்ற விடயம் சட்டத்தில் தெளிவாக கூறப்படவில்லை. எனவே சமூக ஊடகங்களின் செய்திகள் பொதுசுகாதாரத்துக்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதை தடுக்க வேண்டுமாயின் பொலிஸார் எடுக்கும் நடவடிக்கைகள் சட்டபூர்வமானதாக அமைய வேண்டும் - என்றுள்ளது. (ப)

# மக்கள் நடமாட்டம் அற்ற இடங்களில் தனிமைப்படுத்தலைச் செய்யுங்கள்

## மாவை. சேனாதிராஜா வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், ஏப்.29**

**வடக்கில் மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் கொரோனா தனிமைப்படுத்தல் மையங்களை அமைக்குமாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.**



வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக அரசுக்கு அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. இதற்கு அரசு பல வழிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. மாகாண ஆளுநர், பிரதி முதன்மைச் செயலர், மாகாண கல்வி அமைச்சின் செயலர் ஆகியோருக்கும் அரச தரப்பினருக்கும் இடையே கொழும்பில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது. அந்த கூட்டத்திலே வடக்கில் சுமார் ஐந்து பாடசாலைகள் படையினரின் தனிமைப்படுத்தல் நிலையங்களாக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மாகாண மட்டத்தில் கல்வி அமைச்சின் செயலர் கலந்துரையாடலை மேற்கொண்டு பாடசாலைகளை தெரிவு செய்ய முடியும் என்று அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையில் இவ்வாறு வடக்கில் பாடசாலைகளில் தனிமைப்படுத்தல் மையங்களை அமைப்பதாயின் மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் அமையுங்கள் என்று மாகாண ஆளுநருக்கு தெரிவித்துள்ளேன் - என்றார். (ப-7)

# அன்னாசியை பரிசோதியுங்கள்

சாவகச்சேரி,ஏப்.29



தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படும் அன்னாசிப் பழங்களை சுகாதாரப் பரிசோதகர்கள், பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பழவகைகள் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றன.

எனினும் அவற்றை கொள்வனவு செய்வதில் மக்கள் பின்னடிக்கின்றனர்.

கொரோனாத் தொற்று காரணமாகவே மக்கள் அந்தப் பழங்களைக் கொள்வனவு செய்வதில் பின்னிக்கின்றனர்.

அப்பிள், ஒரேஞ் போன்றவற்றுடன் அன்னாசியும் கொண்டுவரப்படுவதால் கொரோனா தொற்று காணப்படும் பிரதேசங்களில் இவை அறுவடை செய்யப்பட்டிருக்கலாமெனவும் சுகாதாரப் பகுதியினர் இவற்றினைப் பரிசோதனை செய்து உறுதிப்படுத்துமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொண்டனர். (ஐ-9)

# டிறிபேக் கல்லூரியையும் விடுவித்தனர் படையினர்

சாவகச்சேரி, ஏப். 29

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் படையினரால் அமைக்கப்படவிருந்த தனிமைப்படுத்தல் நிலையம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அமைப்பதற்காக படையினரால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கல்லூரி வளாகம் துப்பரவு செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட கொட்டகைகளும் அமைக்கப்பட்டன. இறுதிநேரத்தில் திட்டத்தினைக் கைவிட்டு கல்லூரி வளாகத் திறப்பை கல்லூரி அதிபரிடம் கையளித்த படையினர் அங்கிருந்து சென்றனர். (ப-9)

# கூரிய ஆயுதத்தால் குத்தி கொல்லப்பட்ட குழந்தைகள்

லண்டன்,ஏப்.29

லண்டன் நகரில் தமிழ் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் கூரிய ஆயுதமொன்றால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஒரு வயதுடைய பெண் குழந்தையும், மூன்று வயதுடைய ஆண்குழந்தையும் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

அதேவேளை குழந்தைகளின் தந்தைதற்கொலைக்கு முயன்று காயமடைந்த நிலையில், பொலிஸ் காவலுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த இந்தக் குடும்பம் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் லண்டனுக்குக் குடிபெயர்ந்தவர்கள். நிதின்குமார் என்பவர் கடையொன்றில் பணியாற்றி வந்தார்.

குடும்பத்தினர் கிழக்கு லண்டன் இல்போர்ட் அலட்ப்றோ றோட் நோத்தில் உள்ள விநாயகன் ஸ்ரோர்ஸுக்கு மேல் வசித்து வந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை குழந்தைகள் இருவரும் குத்திக் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெண் குழந்தை ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், ஆண் குழந்தை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் சிகிச்சைபலனளிக்காமல் இறந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கத்திக்குத்துச் சம்பவத்தின் பின்னர் இக்குழந்தைகளின் தாய், உதவுங்கள், இவர்கள் எனது பிள்ளைகள் என வீறிட்டு அழுதார் என அயலவர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# 33 வீதமானோர் கணித பாடத்தில் சித்தியில்லை

கொழும்பு,ஏப்.29

நேற்றுமுன்தினம் வெளியாகிய க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் 33 வீதமான மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை திணைக்களத்தின் புள்ளிவிவர அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் 10 ஆயிரத்து 346 பேர் 9ஏ சித்திகளை பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 73.84 வீதமானனோர் கல்வி பொது தராதர பத்திர உயர்தரத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதோடு 66.82 வீதமானோர் கணித பாடத்தில் சித்தி பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-114)

# சாவகச்சேரியில் 26 பேர் தனிமைப்படுத்தலில்

## வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்

சாவகச்சேரி,ஏப்.29

வெளி மாவட்டங்களிலிருந்து தப்பி வந்து சாவகச்சேரியில் தங்கிய நான்கு பேரின் உறவினர்கள் உள்ளிட்ட 26 பேர் சாவகச்சேரியில் தனிமைப்படுத்தப்படவுள்ளனர்.

கொரோனா தாக்கம் காரணமாக நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா தொற்று சந்தேகம் உள்ளவர்கள் தனிமைப்படுத்தல் முகாம்களிலும், வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறார்கள். வெளிமாட்டத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் ஏழு பேர் வந்திருந்தனர். அவர்களை பொலிஸார் யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களில் இருந்தும் பிடித்து, தனிமைப்படுத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டனர். யாழ்ப்பாண மாவட்டத்தில், சாவகச்சேரிக்கு வந்த அவர்களில் நான்கு பேரும் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுடைய குடும்பங்கள் உள்ளிட்ட உறவினர்கள் 26 பேர் சாவகச்சேரியில் உள்ள அவரவர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். வீடுகளுக்கு தனிமைப்படுத்தல் வீடு என அறிவித்தல் பலகை போடப்பட்டு படையினர் காவலுக்கு விடப்பட்டுள்ளனர். (ப-9)

# விவசாயப் பொருளை சந்தைப்படுத்த உதவுக

## மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் கோரிக்கை


மூதூர், ஏப். 29

விவசாய உற்பத்தியாளர்கள், தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் பாரியளவு நஷ்டத்தில் உள்ள நிலையில், அவர்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்காமல் உற்பத்தியைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறு அரசாங்கம் தெரிவித்து வருவது நியாயமற்றது என்று மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக, விவசாயிகள் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதிலும், விற்பனை செய்வதிலும் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். அந்தவகையில் மரக்கறி, பழவகை போன்றவற்றை தமது வாழ்வாதாரத்துக்காக உற்பத்தி செய்துவரும் விவசாயிகள் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதனால், தமது உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். இந்நிலையில், அரசாங்கம் விவசாயிகளை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தெரிவிப்பதுநியாயமற்றதாகும். எனவே, விவசாயிகளின் உற்பத்திகளை, விவசாய திணைக்களங்களின் ஊடாக கிராம மட்டங்களில் கொள்வனவு செய்து தேவையான பிரதேசங்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதோடு, சந்தைப்படுத்த முடியாமல் உள்ள அல்லது மேலதிகமான உற்பத்திகளில் இருந்து வத்தல், ஊறுகாய், பழச்சாறு, பழப்பாகு, பூக்களில் இருந்து பொடி என்பவற்றை உற்பத்தி செய்வதற்கான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும் - என்றார் (ஐ-114)

# கொரோனா கவரேஜ்




■ நிலாந்தன்

இந்தியாவில் வசிக்கும் ஈழத் தமிழரும் ஆவணப்பட இயக்குநருமாகிய சோமிதரன் சில கிழமைகளுக்கு முன் தனது முகநூலில் ஒரு குறிப்பை போட்டிருந்தார். யுத்த காலங்களில் ஊடகங்களில் வரும் நியூஸ் அப்டேட் போலவே கொரோனா அப்டேட்டும் இருக்கிறது என்ற பொருள்பட அவருடைய பதிவு அமைந்திருந்தது. யுத்த காலங்களில் வரும் செய்திகளில் கொல்லப்பட்ட படைவீரர்கள் எத்தனை பேர் விடுதலைப்புலிகள் எத்தனை பேர் காயப்பட்டவர்கள் எத்தனை பேர், கைப்பற்றிய ஆயுதங்களின் எண்ணிக்கை எத்தனை போன்ற விவரங்கள் ஒவ்வொரு நாளும் பத்திரிக்கைகளில் வரும். அப்படித்தான் இப்போதும் 'கொரோனா அப்டேட்' எனப்படுவது எத்தனை பேர் சாவு, எத்தனை பேருக்கு நோய்த் தொற்று, எத்தனை பேர் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள், எத்தனை பேர் குணமடைந்திருக்கிறார்கள் போன்ற விவரங்கள் ஒவ்வொரு நாளும் ஊடகங்களில் வருகின்றன என்று சோமிதரன் குறிப்பிட்டிருந்தார். உலகிலுள்ள பெரும்பாலான ஊடகங்களில் இவ்வாறு கொரோனா 'அப்டேட்கள்' வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் உலகத்தில் கொரோனா ஆபத்து மட்டும்தான் சாவுக்கே தானதா?

உலகில் வைரசால் மட்டும் மக்கள் கொல்லப்படுவதில்லை. வேறு காரணங்களினாலும் மக்கள் நாளாந்தம் கொல்லப்படுகிறார்கள். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் வீதிவிபத்துக்களால் இறப்பவர்களின் தொகை 1,50.000 என்று கூறப்படுகிறது.

இதில் போக்குவரத்தினால் ஏற்படும் வளிமண்டல மாசாக்கத்தால் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை. இதன்படி இந்தியாவில் ஒரு மாதத்தில் வீதி விபத்துக்களால் இறப்பவர்கள் 12,500 பேர். கொரோனா வைரஸ் தாக்கத்தால் நாடு முடக்கப்பட்டது அதனால் வீதி விபத்துக்கள் அனேகமாக இல்லை. கூட்டிக் கழித்துப் பார்த்தால் வீதி விபத்துக்களால் கொல்லப்பட்டவர்களை விட மிகக் குறைந்த அளவு தொகையினரே கொரோனாவால் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இது இலங்கைக்கும் பொருந்தும். அண்மை வாரங்களில் அதிகம் சர்ச்சைக்குள்ளாகிய மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் யாழ்ப்பாணத்துக்கு புதிய பொறுப்பை ஏற்று வருகை தந்த போது தனது முகநூலில் இட்ட பதிவு ஒன்றில் ஒரு புள்ளிவிவரத்தை சுட்டிக் காட்டியிருந்தார். அதன்படி இலங்கை தீவில் ஒவ்வொரு நாளும் வீதி விபத்துக்களால் கிட்டத்தட்ட 10 பேர் இறப்பதாகவும் நூறுக்கும் குறையாதவர்கள் காயப்படுவதாகவும் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் மட்டுமல்ல ஏனைய பல நாடுகளுகளிலும் இது போன்ற புள்ளிவிபரங்கள் இருக்கும்.

கொரோனா வைரஸ் முதலில் தாக்கிய சீனாவில் ஒவ்வொரு ஆண்டும் வளிமண்டல மாசினால் கொல்லப்படுவோரின் எண்ணிக்கை ஏறக்குறைய பதினொரு லட்சம். இது அந்த நாட்டில்கொரோனாவால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை விட மிக அதிகம். கொரோனா வைரஸ் வர முன்னரே சீனாவின் மாநகரங்கள் ஏற்கனவே மாஸ்க் அணிய தொடங்கிவிட்டன. இந்தியாவிலும் தான்.

அதுமட்டுமல்ல உலகம் முழுவதும் இயற்கை மரணங்களால் ஒவ்வொரு நாளும் இறப்பவர்களின் எண்ணிக்கையை விடவும் வைரசினால் இறப்பவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவு என்றே கூறப்படுகிறது.

யுனிசெஃப் தரும் புள்ளிவிபரங்களின் படி 2018ம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் 8 லட்சம் பேர் பட்டினியால் இறந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல உலகம் முழுவதும் பட்டினியால் ஒவ்வொரு நாளும் 24 ஆயிரம் பேர் இறக்கிறார்கள். பொதுமக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட பொது சுகாதார வசதிகள் மறுக்கப்பட்டதால் உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் 10,000 பேர் இறக்கிறார்கள். ஆபிரிக்காவில் மருந்து கொடுத்து குணப்படுத்தக்கூடிய மலேரியாவால் ஒவ்வொருநாளும் 3000 குழந்தைகள் இறக்கின்றன.

அமெரிக்காவின் பொருளாதார தடைகளால் ஈரானிலும் வெனிசுலாவிலும் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானவர்கள் இறக்கிறார்கள். சிரியாவில் நடக்கும் யுத்தத்தில் கடந்த பத்து பத்தாண்டுகளில் ஐந்து லட்சத்துக்கும் குறைந்தவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதாவது ஏறக்குறைய ஒவ்வொரு ஆண்டும் 50,000 பேர் கொல்லப்படுகிறார்கள். அதாவது ஒவ்வொரு மாதமும் கிட்டதட்ட 4 ஆயிரத்துக்கும் குறையாது கொல்லப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல சிரியாவில் கடந்த பத்தாண்டுகளில் 5000 குழந்தைகள் அடிப்படைச் சுகாதார வசதிகள் இன்றி கூடாரங்களில் தங்கியிருக்கிறார்கள். யேமனில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளால் வழங்கப்படும் ஆயுதங்களால் நேரடியாகவும் யுத்தத்தின் விளைவாக மறைமுகமாக பட்டினியாலும் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான குழந்தைகள் கொல்லப்படுகின்றன.

ஆனால் உலகிலுள்ள பேரூடகங்களோ அல்லது பிராந்திய ஊடகங்களோ மேற்சொன்ன புள்ளிவிபரங்களுக்கு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுக்கின்றன? கடந்த 5 மாதங்களாகக் கொரோனாவுக்குக் கொடுக்கப்படும் அதே அளவு முக்கியத்துவம் மேற்படி புள்ளிவிவரங்களுக்குக் கொடுக்கப்பட்டதா?

எனவே உலகம் முழுவதும் கொரோனா அல்லாத வேறு காரணங்களால் அதுவும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட காரண்ங்களால் அல்லது மனிதர்களால் தடுக்கப்படக்கூடிய காரணங்களால் கொரோனோவால் இறப்பவர்களை விடவும் அதிக தொகையினர் கொல்லப்படுகிறார்கள்.

ஆனால் இவையெல்லாம் உலக ஊடகங்களில் உரிய முக்கி யத்துவம் கொடுக்கப்பட்டு கவரேஜ் செய்யப்படுவதில்லை. ஏன்?


கொரோனா உலகப்பொது ஆபத்தாக இருப்பதுதான் காரணமா ? அல்லது அது வெள்ளைக்கார நாடுகளை அதிகம் பாதித்தது ஒரு காரணமா ? அல்லது கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில்முன்னெப்பொழுதும் ஏற்பட்ட ஒரு புதிய ஆபத்து அது என்பது காரணமா? காரணம் எதுவாகவும் இருக்கலாம்.

ஆனால் உலகப்பெரும் ஊடகங்களும் பிராந்திய மற்றும் உள்ளூர் ஊடகங்களும் உலகத்தின் ஒரே பிரச்சினை கொரோனா என்பது போலவும் அதனால்தான் ஒவ்வொரு நாளும் அதிக தொகை கொல்லப்படுவது போலவும் அப்டேட் செய்து வருகின்றன. இந்த சமநிலையில்லாத ஊடகக் கவரேஜிற்கு காரணம் என்ன? ஊடகங்கள் அறமிழந்து போனதா? அல்லது அவற்றிடம் உலகப் பொதுத் தரிசனமேதும் இல்லாமற் போனதா? கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவர் கூறுவது போல ஊடகங்கள் 'ஸ்கோர் போர்ட்' ஆக மாறி விட்டனவா?

ஓர் உலகப்பொது ஆபத்தை குறித்து ஒவ்வொரு நாளும் அப்டேற் செய்யத் தேவை இல்லையா?என்று கேட்கலாம். செய்யத்தான் வேண்டும். ஆனால் கொரோனாவுக்கும் அப்பால் பல உலகங்கள் உண்டு. அங்கே வைரசை விடவும் வேறு காரணங்களுக்காக அதிக தொகையினர் கொல்லப்படுகிறார்கள். அவற்றுக்கும் ஊடகங்கள் உரிய கவரேஜ் கொடுக்க வேண்டும். வைரஸுக்கு மருந்து இல்லை. ஆனால் பட்டினிக்கு மருந்து இருக்கிறது. அந்த மருந்தைக் கொடுக்காத படியால்தானே 8 லட்சம் குழந்தைகள் இறக்கிறார்கள்?" என்று இந்தியாவில் உள்ள அரசியல் செயற்பாட்டாளரான மருதையன் கேட்டிருக்கிறார்.

அது மட்டுமல்ல்ல பெரும்பாலான ஊடகங்கள் நடுத்தர வர்க்கத்தையும் மேல் நடுத்தர வர்க்கத்தையும் தான் குறிவைக்கின்றன. அதற்கு கீழ் இருக்கும் வர்க்கங்களை அவர்கள் கண்டுகொள்வதில்லை. தொலைக்காட்சி விவாதங்களும் வெளிவரும் கட்டுரைகளும் அதிகபட்சம் நடுத்தர வர்க்கத்தின் பிரச்சினைகளைப் பற்றியே உரையாட முற்படுகின்றன. விதிவிலக்காக சமூக வலைத்தளங்களில் தான் வறிய மக்களின் விவகாரம் அதிகம் கதைக்கப்படுகிறது.

உதாரணமாக இந்தியாவில் ஊரடங்கு சட்டம் காரணமாக அன்றாடச் சம்பளத்துக்கு வேலை செய்த பலரும் தமது சொந்த மாநிலங்களுக்கு உடனடியாக திரும்ப நிர்ப்பந்திக்கபட்டார்கள். போதிய போக்குவரத்து வசதிகள் இன்றி நடந்தே மாநிலங்களைக் கடந்த பலரும் களைப்பினாலும் பசியினாலும் இறந்திருக்கிறார்கள். இவ்வாறு இறந்தவர்களின் தொகை கிட்டத்தட்ட 300ஐத் தாண்டும். அதேசமயம் இந்தியாவில் இன்று (24.04.20)வரையிலும்கொரோனாவால் கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 775.




(மறுபக்கம் பார்க்க)

# கொரோனா கவரேஜ்

(தொடர்ச்சி)



ஊரடங்குச்சட்டம் அல்லது சமூக முடக்கத்தால் அதிகம் பாதிக்கப்படுவது அன்றாடம் காய்ச்சிகளும் நாளாந்த சம்பளம் பெறுபவர்களும்தான். இதில் அரசு ஊழியர்களும் ஓரளவுக்கு நடுத்தரவர்க்கமும் சமாளித்துக் கொள்கிறது. அன்றாட சம்பளம் பெறுவோருக்கு வேறு வருமானங்கள் இல்லையென்றால் சேமிப்பைக் கரைக்க வேண்டியதுதான்.

இவ்வாறு சமூகத்தின் பெரும்பகுதி சேமிப்பைக் கரைக்கும் ஒரு நிலைக்கு வந்துவிட ஒரு சிறு பகுதி வீடுகளில் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு கொழுப்பைக் குறைப்பதற்கு எப்படி உடற்பயிற்சி செய்யலாம் என்பது குறித்து சமூக வலைத்தளங்களிலும் கைபேசிச் செயலிகளிலும் விவாதித்து வருகிறது. வாட்ஸ்அப் வைபர் போன்ற கைபேசிச் செயலிககளில் பரவும் வீடியோக்களில் பெரும்பாலானவை நடுத்தர வர்க்கத்தை நோக்கியே வருகின்றன. நோய் எதிர்ப்பு சக்தியை எப்படி அதிகரிக்கலாம். அதற்கு என்னென்ன உடற்பயிற்சிகள் செய்யலாம் சமூக முடக்கத்தின் போது இசைவுகள் குறைவதனால் உடலில் கொழுப்பு கூடி உடலின் எடை கூடினால் அதற்கு என்னென்ன அப்பியாசங்கள் செய்ய வேண்டும்? என்று ஒரு பகுதி சிந்திக்கின்றது.

ஆனால் சமூகத்தின் பெரும்பகுதிக்குச் சேமிப்பு கரைகிறது. இலங்கைதீவில் அரசாங்கம் ஐயாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அரசியல் கட்சிகளும் தன்னார்வ அமைப்புகளும் நிவாரணம் வழங்குகின்றன. இது போதாதா ?என்று சிலர் கேட்கக் கூடும். உண்மைதான். இது ஒத்திவைக்கப்பட்ட தேர்தலுக்கு உரிய ஒரு காலம் என்பதனால் கொரோனாக் காலத்தில் இலங்கைத்தீவில் ஏழைகளுக்கு ஏதோ சாப்பிடக் கிடைத்திருக்கிறது.

ஆனால் ஊரடங்கும் சமூக முடக்கமும் மேலும் நீண்டு சென்றால் தன்னார்வக் குழுக்களும் கட்சிகளும் தொடர்ந்து நிவாரணம் வழங்குமா?

இலங்கையோடு ஒப்பிடுகையில் இந்தியாவில் ஏழைகளின் நிலை மோசம் என்று கூறப்படுகிறது. அங்கே சமூக முடக்கம் ஏழைகளின் வயிற்றில் அடித்திருக்கிறது. அவர்களுக்குக் கொரோனாவை விடவும் பசி பெரிய ஆபத்தாக இருக்கிறது. அதுமட்டுமல்ல தனிமைப்படுத்தல் சுய தனிமைப்படுத்தல் போன்றவற்றிலும் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையே வேறுபாடுகள் உண்டு என்று ஒரு இந்திய மருத்துவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

"தனியாள் இடைவெளி என்பது ஒரு முன்னுரிமை அல்லது சலுகை. அதன் அர்த்தம் என்னவென்றால் ஒரு பெரிய வீட்டில் நீங்கள் வசித்தால் அதை நீங்கள் நடைமுறைப்படுத்தலாம்" என்பதுதான்.

அப்படித்தான் தொற்று நீக்கியும் ஒரு சலுகை. அதை வாங்குவதற்கு உங்களிடம் காசு இருக்கிறது என்று பொருள். சமூக முடக்கமும் ஒரு சலுகை. வீட்டில் இருந்தபடி பொருட்களைப் பெற உங்களால் முடியும் என்பது இதன் அர்த்தம்.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான பெரும்பாலான வழிமுறைகள் வசதி உள்ளவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கக்கூடியவை. சாராம்சத்தில் உலகம் முழுவதும் பயணம் செய்யும் பணக்காரர்களால் பரப்பப்படும் ஒரு நோய்க்கு ஏழைகள் பலியாகிறார்கள். தனியாள் இடைவெளியைப் பேணுகின்ற அல்லது சமூக முடக்கத்தைப் பேணுகின்ற எங்களில் பலர் நாங்கள் எவ்வளவு முன்னுரிமை பெற்றவர்கள் என்று எங்களைப் பாராட்டிக் கொள்ள வேண்டும். ஏனெனில் பெரும்பாலான இந்தியர்கள் இவற்றை நடைமுறைப்படுத்த முடியாதவர்களாகக் காணப்படுகிறார்கள்."

அது உண்மைதான் இந்தியாவின் மிகப்பெரிய நகர்ப்புறச் சேரிகளில் எப்படித் தனியாள் இடைவெளிகளைப் பேணுவது? உலகின் மிக மிகப்பெரிய நகர்ப்புற சேரிகளில் ஒன்றாகிய பம்பாயில் உள்ள தாராவியின் மொத்த பரப்பளவு 0.82 சதுரமைல்கள் மட்டும்தான். இதில் வசிப்பவர்களின் எண்ணிக்கை 8.69 இலட்சம். ஆயின் அந்தச் சேரியில் தனிமனித இடைவெளியைத் தீர்மானிப்பது இடமா பொருளாதாரமா? என்று கேட்கப்படுகிறது. "300 குடும்பங்களுக்கு வெறும் 5 கழிப்பறைகள்தான் உள்ளன. காலையில் இதனை பயன்படுத்த அவ்வளவு கூட்டம் இருக்கும்? இந்த சூழலில் எப்படி கொரோனாவிலிருந்து நாங்கள் தப்பிப்பது?" என்று மும்பை தாராவில் சேரியில் வசிக்கும் தமிழர்கள் கேட்கிறார்கள். இந்தியாவில் மட்டுமல்ல இலங்கைத் தீவின் பெருநகரங்களில் குறிப்பாக கொழும்பு மாநகரின் புறநகரப் பகுதிகளில் இருக்கும் தோட்டங்கள் என்றழைக்கப்படும் சனச் செறிவு மிக்க சேரிகளின் நிலைமையும் இத்தகையதே.

எனவே வைரஸை கட்டுப்படுத்துவதில் உலகம் எல்லாருக்கும் சமமாக இருக்கிறது என்று பொருள் இல்லை. நமது ஊடகங்களும் அவற்றை சமமாக கவரேஜ் செய்வதில்லை. நோபல் பரிசு பெற்ற இந்தியரான அமர்தியா சென் ஒருமுறை கூறியிருந்தார். நடுநிலை ஊடகங்கள் இயங்கும் ஒரு சமூகத்தில் பசி, பட்டினி, இயற்கை பேரழிவு போன்றன சமூகத்தைத் தாக்குவதில்லை. ஏனெனில் அந்த ஊடகங்கள் வரவிருக்கும் அனர்த்தத்தை முன்கூட்டியே எச்சரித்து விடும். அதனால் உஷார் அடைந்த அரசுகள் முன்கூட்டியே தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு விடு என்று.

அப்படி என்றால் கொவிட் 19இன் வருகையை உலக ஊடகங்கள் ஏன் முன்னுணர முடியல்லை? அது உலகத்தைத் தாக்கிய பின்னராவது இனிமேலும் அதன் அடுத்த வளர்ச்சியான ஒரு வைரஸ் மனித குலத்தை தாக்குவதற்குற்கு முன்பாக அரசுகளையும் சமூகங்களையும் உஷார் படுத்த வேண்டிய பொறுப்பு தயார்படுத்த வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. ஓர் உலகப் பெரும் தொற்று நோய்க்காலத்திலாவது கற்றுக் கொள்வோமா? வைரஸ் தன்னை அப்டேற் செய்து கொள்ளமுன் நாங்கள் எங்களை அப்டேற் செய்து கொள்வோமா? ■

## வவு. மருத்துவமனையில் கூடாரங்கள் அமைப்பு!

வவுனியா, ஏப்.29

சமூக இடைவெளியைக் கருத்தில் கொண்டு, வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் வர்த்தக சங்கத்தால் கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு வருபவர்களின் எண்ணிக்கை தினசரி அதிகரித்து வருவதால், அவர்களிடையே சமூக இடைவெளியைப் பேணுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து மருத்துவமனையின் சில பகுதிகளில் தற்காலிகக் கூடாரம் அமைத்து நோயாளிகளிடையே சமூக இடைவெளியைப் பேண உதவி செய்யுமாறு வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைப் பணிப்பாளர் கே.நந்தகுமார் வவுனியா வர்த்தக சங்கத்தினரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

மருத்துவமனைப் பணிப்பாளரின் கோரிக்கையை அடுத்து, மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வவுனியா வர்த்த க சங்கத்தின் ஏற்பாட்டில், வவுனியா மாவட்ட மருத்துவமனையில் நான்கு கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஐ-18)






## கபில நிறத் தத்தியால் பாதிப்பு; விவசாயிகளுக்கு தலா ரூ. 5,000

கொழும்பு, ஏப்.29

2019ஆம் ஆண்டு காலப் பகுதியில் நெற் செய்கையின் போது ஏற்பட்ட கபில நிற தத்தி நோய் தாக்கம் காரணமாக பாதிப்புற்ற விவசாயிகளுக்கு சிறப்புக் கொடுப்பனவாக தலா 5 ஆயிரம் ரூபாவை அரசின் ஊடாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இது தொடர்பில் அரசிடம் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இந்தப் பாதிப்பை விவசாயத் திணைக்களத்தில் உறுதி செய்திருத்தல் அவசியமாகும். அத்துடன் காப்புறுதி நிறுவனங்களின் ஊடாக ஏற்கனவே 5 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை பெற்றவர்களும் தற்போது விண்ணப்பிக்கலாம். இது தொடர்பான விண்ணப்ப படிவத்தை எனது கல்முனை காரியாலயத்தில் பெற்றுக்கொண்டு உடனடியாக பூரணப்படுத்தி சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறேன். இந்தக் கொடுப்பனவை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கொடுத்து வழங்க வேண்டியள்ளதால் உடனடியாக இதற்கான விண்ணப்பத்தை பூரணப்படுத்தி வழங்குங்கள் - என்றார். (ப)



## குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.29

சின்மயா மிஷன் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயாணந்தரின் ஜெயந்தியை முன்னிட்டு கிளிநொச்சி சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் அண்மையில் குருதிக் கொடை முகாம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த குருதிக் கொடை முகாமில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ந)

# பாடசாலைகளை ஒருபோதும் படையினருக்கு வழங்கோம்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் உறுதி

யாழ்ப்பாணம், ஏப்.29

**தற்போதுள்ள அச்சமான சூழலில், இராணுவத்தினருக்கு பாடசாலைகளை வழங்கமுடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

'அரசாங்கம் தற்போது பாடசாலைகளிலும், ஏனைய கல்வி நிறுவனங்களிலும் இராணுவத்தினரை தங்கவைப்பதற்கான செயற்பாட்டை முன்னெடுத்து வருவதாக மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் பாடசாலைகள் சிலவற்றை இராணுவத்தினர் சில தேவைகளுக்கு இதற்கு முன்னர் பயன்படுத்தியிருந்தாலும் கூட தற்போது கொரோனா நோய் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினர் தங்கவைக்கப்படுவதை எதிர்த்து கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலைபோன்றகல்விநிறுவனங்களை சூழவுள்ள மக்களால் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுள்ளன.

எனவே இந்த அச்சமான சூழ்நிலையில் தனிமைப்படுத்துதல் மற்றும் தொற்றைக் கட்டுப்படுத்தல் என்னும் போர்வையில் பாடசாலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவே மக்கள் மத்தியில் அச்சநிலை உருவாகின்ளது.

இந்தச் சூழலில் பாடசாலைகளையும் கல்வி நிறுவனங்களையும் இராணுவத்தினருக்கு வழங்குவதை அரசு நிறுத்தவேண்டும். நாடுபூராகவும் 43 லட்சம் மாணவர்கள் கல்விகற்றுவரும் நிலையில் பாடசாலைகளை சூழ உள்ள சமூகத்தினருக்கு அச்சமூட்டும் வகையில் செயற்பாடுகள் நடைபெறுவதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மக்கள் செறிவு நிறைந்த இடங்களில் அமைந்த பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களில் இத்தகைய தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்க முயற்சிப்பதாகவே தகவல்கள் கிடைத்துள்ளன.

குறிப்பாக வடக்கு மாகாணக் கல்வியமைச்சின்கீழ் வடமராட்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்போன்றபகுதிகளில்பாடசாலைகள் சிலவற்றை வழங்குமாறு இராணுவத்தினர் கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு கொரோனா நோய்த்தொற்று தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு பாடசாலைகளையும், கல்வி நிறுவனங்களையும் வழங்குவதை இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்க்கிறது.

"தனிமைப்படுத்தல் நிலையங்களாக பாடசாலைகள்மாற்றப்படாது" எனக்கல்வியமைச்சு அறிவித்துள்ள நிலையில் இதன் உண்மைத்தன்மையை கல்வியமைச்சு முறையான அறிக்கையூடாக வெளிப்படுத்தவேண்டும். அச்சுறுத்தல் நிறைந்த இந்த சூழலில் பாடசாலைகளை இராணுவத்தினருக்கு வழங்கும் செயற்பாட்டை கல்வியமைச்சு உடன் நிறுத்த வேண்டும், என்றுள்ளது. (ஐ)

## பாடசாலைகள் ஆரம்பமான பின்னரே பெறுபேறுகள் தொடர்பில் மீள் பரிசீலனை

கொழும்பு,ஏப்.29

வெளியாகியுள்ள கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளில் நிலவும் சந்தேகங்கள் தொடர்பில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் பரீட்சை பெறுபெறுகள் முரண்பாடுகள் காணப்பட்டால் பரீட்சார்த்திகள் 011 2784 208, 011 2784 537 அல்லது 011 3188 350 என்ற இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்த முடியும் என்று பிரதி பரீட்சைகள் ஆணையாளர் எஸ்.பிரணவதாசன் தெரிவித்தார்.

இதுதவிர 1911என்ற இலக்கத்துக்கும் அழைப்பை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## சிறுவர்கள் மீதான வன்முறைக்கு எதிராக நாற்பது நாள்களில் 482 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.29

சிறுவர்களுக்கு எதிராக கடந்த 40 நாள்களில் 482 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 41 வீதமான முறைப்பாடுகள் சிறுவர் துன்புறுத்தல் தொடர்பானது என்று அதன் தலைவர் கலாநிதி முதித விதானபதிரன தெரிவித்தார்.

அத்துடன் பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் 27 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## லொறியில் சிக்கியது பெருமளவு கேரள கஞ்சா

கொழும்பு, ஏப்.29


தம்புத்தேகம பிரதேச பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து வெலிமடை, கெப்பெட்டிப்பொல பொருளாதார மத்திய நிலையத்துக்குக் கடத்திச் செல்லப்பட்ட பெருந்தொகையான கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

லொறியின் ஆசனத்தின் பின்புறமாக மறைத்து கடத்தப்பட்ட நிலையிலேயே கைப்பற்றப்பட்டதுடன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

ஊரடங்கு வேளையில் கெப்பெட்டிப்பொல் பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து தம்புத்தேகம பிரதேச பொருளாதார மத்திய நிலையத்துக்கு மரக்கறி வகைகளை ஏற்றிச் செல்லவென அத்தியாவசிய சேவை என பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கரை ஒட்டியவாறு பயணித்த லொறி தொடர்பில் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் கெப்பெட்டிப்பொல பொருளாதார மத்திய நிலையத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த லொறியை நிறுத்திச் சோதனை செய்தனர். இதன்போது சாரதி ஆசனத்தின் பின் புறமாக மறைத்து வைத்திருந்த பெருந்தொகையான கேரள கஞ்சா பொதிகளையும் பணத்தையும் கைப்பற்றிய பொலிஸார் சாரதியைக் கைது செய்து பொலிஸில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப)

## வாழையில் அதிசயம்

மட்டக்களப்பு,ஏப்.29



மட்டக்களப்பு நொச்சிமுனைப் பகுதியில் உள்ள வீட்டில்வெட்டப்பட்டவாழையொன்றில் வாழைக்குலையொன்று மீண்டும் வெளிவந்துள்ளது.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் குலை வெட்டப்பட்டிருந்த வாழை மரத்திலேயே இந்த வாழைக்குலைக்கான பொத்தி வந்துள்ளது.

இயற்கையான முறைகளுக்கு மாறாக வாழைக்குலை வெளிவந்துள்ளமை அதிசயத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-150)

## தருமபுரத்தில் வாள்வெட்டு

கிளிநொச்சி, ஏப். 29

வாள்வெட்டு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் காயமடைந்தவர் குருதி சிந்தியவாறு பொலிஸ் நிலையம் சென்றநிலையில், பொலிஸார் அவரை மருத்துவமனைக்கு அனுப்பினர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்றது.

வெட்டுகாயங்களுக்குள்ளானவர் தருமபுரம் பகுதியைச்சேர்ந்த 32 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-113,6)

## முகாமிலிருந்து அவசரமாக படையினர் வெளியேற்றம்

வடமராட்சி,ஏப்.29

வடமராட்சி எள்ளங்குளம் படை முகாமிலிருந்து அவசர அவசரமாக அம்புலன்ஸ்கள் மூலம் படையினர் வெளியகற்றப்பட்டமை மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு தடவைகளாக இராணுவ அம்புலன்ஸ்கள் மூலம் முகாமிலிருந்து படையினர் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளனர். தொடர்ந்து மருந்து விசிறல் பணிகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டன என்றுகள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளது மாவீரர் துயிலுமில்லம் அமைந்திருந்த எள்ளங்குளம் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு தற்போது படைத்தளமாக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வடக்கு மாகாணத்தில் பல பாடசாலைகளை தனிமைப்படுத்தல் மையங்களுக்குப் பயன்படுத்த அரசு முனைப்பு காட்டி வருகின்ற நிலையில், அதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிடப்

## யாழ். இந்துவில் 26பேருக்கு 9ஏ

யாழ்ப்பாணம், ஏப். 29

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து தோற்றிய 250 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர் என்று பாடசாலை அதிபர் ஆர்.செந்தில்மாறன் தெரிவித்துள்ளார்.

26 மாணவர்கள் 9ஏ பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். அவர்களில் 14 பேர் ஆங்கிலமொழி மூலமும், 12 பேர் தமிழ்மொழி மூலமும் தோற்றியவர்கள்.

29 மாணவர்கள் 8ஏ பெறுபேற்றையும், 28 மாணவர்கள் 7ஏ பெறுபேற்றையும் பெற்றுள்ளனர் என்று பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஒ.5)

## நகை அடகுக்கு வங்கிகளில் வருடாந்த வட்டி 12 சவீதமே!

*மத்திய வங்கி அறிவிப்பு*

கொழும்பு, ஏப்.29
வங்கிகளில் தங்க நகை அடகு வைப்பதற்காக வழங்கப்படும் முற்பணத்துக்கான அதிகபட்ச வருடாந்த வட்டி வீதம் 12 சவீதம் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள இக்கட்டான பொருளாதார நிலையால் குறுகிய கால பணத் தேவைகளுக்கு தங்க நகைகளை அடகு வைக்கும் குறைந்த வருமானம் பெறும் தனி நபர்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
தற்போது வங்கிகளில் தங்க நகைகள் அடகு வைப்பதற்கான வருடாந்த வட்டி 12 முதல் 17.5 சதவீதம் வரை உள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலையில் அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளில் ஒரு வருடத்துக்கு குறைந்த காலத்துக்கான அடகுகளுக்கான அதிகபட்ச வட்டி வருடத்துக்கு 12 சதவீதம் அல்லது மாதாந்தம் ஒரு சதவீதமாக இருக்க வேண்டும் என இலங்கை மத்திய வங்கி உத்தரவிட்டுள்ளது. ஏப்ரல் 27 ஆம் திகதி முதல் இது நடைமுறைக்கு வந்துள்ளது என்றும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ப)

# விதி மீறுவோரைப் பிடிக்க சிவில் உடையில் பொலிஸ்!

கொழும்பு, ஏப்.29
**கொவிட் 19 வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருவதால், சுகாதார ஆலோசனைகளுக்கமைய பொது இடங்களில் சமூக இடைவெளியை கடைப்பிடிக்காதவர்களைக் கைதுசெய்ய சிவில் உடையில் பொலிஸார் களமிறக்கப்படுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய கொரோனா வைரஸ், இலங்கையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
அதையடுத்து நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. தற்போது சில மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும், சுகாதாரப் பிரிவினரின் நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
அதை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக பொலிஸார் சிவில் உடையில் கடமையில் ஈடுபடவுள்ளனரென, பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றாதவர்களை கைதுசெய்யும் நடவடிக்கையும் நேற்று முதல் முன்னெடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார். (ப-114)

## வவு.நகரில் தொற்று நீக்கும் செயற்பாடு!

வவுனியா,ஏப்.29
வவுனியா நகரில் தொற்றுநீக்கும் செயற்பாடு நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. வெலிசறை கடற்படைமுகாமில் கடமையாற்றும் வவுனியாவைச் சேர்ந்த கடற்படை உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.
அந்தக் கடற்படை வீரர் வவுனியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணித்துள்ளார். நகரில் அவர் பயணித்த பகுதிகளைத் தொற்று நீக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக வவுனியாவில் அமைந்துள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைகள் நேற்று மூடப்பட்டு கிருமி நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
சுகாதாரப் பிரிவினர், மாவட்டச் செயலகம், விசேடஅதிரடிப் படையினர், பொலிஸார், நகரசபை, பிரதே சபை, வர்த்தக சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை அந்தக் கடற்படை வீரர் தொடர்புகளைப் பேணிய பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களிலும் நேற்று தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தாலும் காமினி மகா வித்தியாலத்துக்கு முன்பான பகுதியில் மரக்கறி விற்பனைசெய்யும் செயற்பாடு இடம்பெற்றிருந்ததுடன் பொது மக்களும் அதிகளவில் நகர்நோக்கி வருகை தந்திருந்தனர். (ப-110)



## அஞ்சலி செய்யவும் கையுறை

யாழ்ப்பாணம், ஏப்.29
தந்தை செல்வாவின் 43ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரின் நினைவு இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தந்தை செல்வா அறக்கட்டளையால் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. முன்னதாக அஞ்சலி நிகழ்வுக்கு மறுப்புத் தெரிவித்திருந்த பொலிஸார், பின்னர் அதில் கலந்து கொள்பவர்களுக்கு கையுறைகளை வழங்கி அனுமதியளித்தனர். (ப)

## தந்தை செல்வாவுக்கு யாழில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப்.29
தந்தை செல்வாவின் 43 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரின் நினைவு இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தந்தை செல்வா அறக் கட்டளையினரால் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. மலர் தூவி, மாலை அணிவித்த அவர்கள் தந்தை செல்வாவுக்கு மௌன அஞ்சலியும் செலுத்தினர்.
இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், மற்றும் தந்தை செல்வா அறக்கட்டளை நிலைய தலைவர் ஜெபநேசன் ஆண்டகை உட்பட பலர் கலந்து கொண்டனர். (ப-7)






# ஊரடங்கு தளர்வின் போதும் வெறிச்சோடியது வவுனியா!

வவுனியா, ஏப்.29
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றையடுத்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று வவுனியா மாவட்டத்தில் 15 மணிநேரம் தளர்த்தப்பட்ட நிலையிலும் வவுனியா நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன், நகரில் குறைந்தளவு மக்கள் நடமாட்டம் காணப்பட்டது.
நாட்டில் கொரோனா தொற்று தீவிரம் அடைந்ததையடுத்து நாடு பூராகவும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் வவுனியா உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 5 மணிக்கு தளர்த்தப்பட்டு இரவு 8 மணிக்கு மீண்டும் நடைமுறைக்கு வருகிறது.
வெலிசறை இராணுவ முகாமில் இருந்து விடுமுறையில் வவுனியா மகாகச்சக்கொடி பகுதிக்கு வந்த கடற்படை வீரருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்தக் கடற்படை வீரர் வவுனியா நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வந்துள்ளார். இதனால் பலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகவுள்ளனர். கடற்படை வீரர் சென்ற இடங்களை முழுமையாக தனிமைப்படுத்துவதற்காகவும் நகரை மருந்து தெளித்து சுத்திகரிப்பு செய்வதற்காகவும் சுகாதார துறையின் ஆலோசனைக்கு அமைவாக நேற்று வர்த்தக நிலையங்களை பூட்டி கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேன நேற்று ஊடகங்கள் மூலம் மக்களுக்கு விடுத்த கோரிக்கைக்கமைவாக வவுனியாவிலுள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததால், மக்களின் நடமாட்டமும் குறைந்தளவில் காணப்பட்டது. (ப18)

## பூசா முகாமில் இருந்து ஐவர் வீடு திரும்பினர்!

கொழும்பு,ஏப்.29
பூசா கடற்படை முகாமின் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில், தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த மேலும் ஐவர் நேற்று முன் தினம் தங்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை முடித்த இந்த ஐவரும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அத்துடன் தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை நிறைவு செய்ததை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களும் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.
தற்போது பூசா கடற்படை முகாமின் தனிமைப்படுத்தல் நிலையத்தில் 89 பேர் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்ததுடன், இன்னும் 64 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)



## சிக்கியவர்கள் மீண்டனர்

கொழும்பு, ஏப்.29
கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து. இலங்கைக்கு வர முடியாமல் பங்களாதேஷில் சிக்கியிருந்த இலங்கை மாணவர்கள் 73 பேர் விசேட விமானம் மூலம் நேற்று முன் தினமிரவு நாட்டை வந்தடைந் தனர்.
பங்களாதேஷின் டாக்கா நகரிலிருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்கு சொந்த மான யு.எல் 1423 எனும் விமானம் மூலம் அவர்கள் இலங் கையை வந்தடைந்த னர்.
இவ்வாறு வந்த மாண வர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து தொற்றுநீக்கம் செய்யப்பட்டதோடு, தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அவர்கள் தனிமைப்ப டுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளனர். (எ-22)

## யாழ். இந்துவில் 26பேருக்கு 9ஏ

யாழ்ப்பாணம், ஏப். 29
2019ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதா ரண தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து தோற்றிய 250 மாண வர்களும் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் ஆர். செந்தில்மாறன் தெரி வித்துள்ளார்.
26 மாணவர்கள் 9ஏ பெறுபேற்றைப் பெற் றுள்ளனர்.
அவர்களில் 14 பேர் ஆங்கிலமொழி மூல மும், 12 பேர் தமிழ் மொழி மூலமும் தோற்றியவர்கள்.
29 மாணவர்கள் 8ஏ பெறுபேற்றையும், 28 மாணவர்கள் 7ஏ பெறுபேற்றையும் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஒ.5)

# மன்னாரில் 7 பேர் தனிமைப்படுத்தல்

மன்னார்,ஏப்.29
**வவுனியாவில் கொரோனா தொற்றுக்கு உள்ளான கடற் படை சிப்பாயுடன் நெருங்கிப் பழகிய தேசிய நீர் வழங் கல் வடிகாலமைப்பு சபையின் சாரதி ஒருவர், அலுவலக ப்பணியின் நிமித்தம் மன்னாருக்கு வந்து சென்றுள்ள நிலை யில் மன்னாரில் மூன்று இடங்களில் 7 நபர்கள் சுய தனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தி யர் தர்மராஜா வினோதன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது.
அண்மையில் விடுமுறையில் சென்று மீண் டும் வவுனியா திரும்பிய கடற்படைச் சிப் பாய்க்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. அவருடன் நெருங்கிப் பழகிய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் சாரதி ஒருவர் மன்னாருக்கு வந்து சென்றுள்ளார். குறித்த சாரதி அலுவலகப் பணிக்காக வந்து மூன்று இடங்கள் சென்றுள்ளார். குறித்த மூன்று இடங்களும் அடையாளம் காணப் பட்டுள்ளன. மூன்று இடங்களில் இருந்த 7 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர்.
இதை விட மன்னார் மாவட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினுடைய தலைமை அலுவலகத்துக்கும் குறித்த சாரதி வந்து சென்றுள்ளமையால் குறித்த அலுவ லகத்தில் இருக்கின்ற சில உத்தியோகத்தர் களை அலுவலகத்தில் இருந்து கொண்டே கடமையாற்றும் படியும் அவர்களை வெளி யில் செல்ல வேண்டாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இவர்கள் அத்தியாவசிய சேவையில் ஈடுபடு கின்றவர்கள். இவர்களுக்குக் கொரோனா தொற்று உள்ளதா என்பதற்கான பரிசோ தனை மேற்கொள்ளப்படவுள்ளது.
பரிசோதனை முடிவடைந்தவுடன் குறித்த அலுவலகம் மீண்டும் வழமை போல் இயங்க அனுமதிக்கப்படும்.
மேலும் மன்னார் நடுக்குடாப் பகுதியில் மேற் கொள்ளப்பட்டு வரும் மின் உற்பத்தி வேலைத் திட்டத்தில் கலந்து கொண்டுள்ள வெளி மாவட் டங்களைச் சேர்ந்த பணியாளர்கள் சில ருக்கு நோய்ப் பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளது - என்றார். (க-56)

# சங்கிலி அறுப்பை முறியடித்த மூதாட்டி

யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணம் திருநெல்வேலி மணல்தறை ஒழுங்கையில் மூதாட்டியின் கெட்டித்தனத் தால் சங்கி அறுக்கும் கொள்ளையர்களின் முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.
மணல்தறை வீதியில் ஒரு மோட்டார் சைக்கி ளில் வந்த இரு இளைஞர்கள் , அந்த வழி யால் சென்றுகொண்டிருந்த 78 வயது மூதாட்டியின் சங்கிலியைப் பிடித்து அறுத்து விட்டனர். இதை மூதாட்டி எதிர்பார்க்காதபோ தும் அறுக்கப்பட்ட 2 பவுண் சங்கிலியை ஒரு கரத்தால் பற்றிப்பிடித்துக்கொண்டு, தனது கையில் இருந்த குடையால் சங்கிலி அறுத்த இளைஞனைத் தாக்கியவாறு அவலக் குரல் எழுப்பினார்.
அறுத்த சங்கிலியை அபகரிக்க முடியாத நிலையில், அயலவர்கள் வரும் சத்தம் கேட் டதால் கொள்ளையர்கள் இருவரும் தப்பி யோடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

## இராணுவ வாகனம் மோதி பொலிஸ் சார்ஜண்ட் சாவு!

### சிப்பாய் கைது

கொழும்பு, ஏப்.29
நாரம்மல - குளியாப்பிட்டி பிரதான வீதியில் இடம் பெற்ற விபத்தில், பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடஹபொல, கல்வங்குவ சந்தியில் நேற்று முன்தினமிரவு இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.
குளியாப்பிட்டியிலிருந்து நாரம்மல நோக்கிப் பய ணித்த இராணுவத்தினரின் கப் வாகனமும், எதிர்த்திசையில் பயணித்த பொலிஸ் சார்ஜண்டின் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இவ் விபத்து சம்பவித்துள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் சார்ஜண்ட், நாரம்மல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் னர் உயிரிழந்துள்ளார். நாரம்மல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவரும் பொத்துஹர பிரதேசத்தைச் சேர்ந்தவருமான 47 வயதுடைய பொலிஸ் சார்ஜண்ட் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து தொடர்பில் இராணுவத்தினரின் கப் வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதியான சிப்பாய் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள் ளார். (எ-22)

## கடற்படையை ஏற்றிச்சென்ற பஸ் மதிலுடன் மோதுண்டது!

### 5 சிப்பாய்கள் படுகாயம்

கொழும்பு, ஏப்.29
கடற்படையினர் பயணித்த இ.போ.ச. பஸ் விபத் துக்குள்ளானதில் 5 சிப்பாய்கள் படுகாயமடைந் துள்ளனர். காலி - கொழும்பு பிரதான வீதியில், அம்பலாங்கொடை, ரந்தம்பை பிரதேசத்தில் நேற்று அதிகாலை இவ்விபத்து இடம்பெற்றுள் ளது.
இந்த பஸ் வீதியிலிருந்து விலகிச் சென்று மதி லொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விடுமுறைக்குச் சென்ற பத்தேகம, காலி, கொக் கல பகுதிகளைச் சேர்ந்த 32 கடற்படையினர் கொழும்பு நோக்கிப் புறப்பட்ட வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
பஸ் சாரதி உறக்கக் கலக்கத்தில் இருந்ததால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸா ரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. பஸ் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ள னர். இந்த விபத்தில் படுகாயமடைந்த கடற்படை யினர், பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர். (எ-22)

## முடக்கப்பட்டது நாரஹேன்பிட்டி

கொரோனா வைரஸ் தொற்றுள்ள ஒரு வர் கொழும்பு 05, நாரஹேன்பிட்டியில் அடையாளம் காணப்பட்டதையடுத்து அந்தப் பகுதி முடக்கப்பட்டுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது:
நாரஹேன்பிட்டி, தாபரே மாவத்தையில் கொரோனா நோயாளர் ஒருவர் அடை யாளம் காணப்பட்டதையடுத்து அந்தப் பகுதி முடக்கப்பட்டது. அதனை அண்டிய பகுதிகள் குறித்தும் கவனம் செலுத்தப்ப டுகின்றது. நாங்கள் வழமையாகச் செய் யும் பரிசோதனைகளின் எண்ணிக் கையை அதிகரித்துள்ளோம். - என் றார். (எ-22)

# யாழ்ப்பாணத்தில் தினமும் 200 பரிசோதனைகள்!

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29
யாழ்ப்பாணத்தில் தினமும் கொரோனாத் தொற்றுத் தொடர் பில் 200 பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கொழும்பு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத் திலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் இதனை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் தற்போது தினமும் 30 சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. இதனை அதிகரிக்க வேண் டும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. நாடு முழுவ தும் சோதனைகளை அதிகரிப் பதன் ஒரு பகுதியாகவே யாழ்ப் பாணத்திலும் சோதனைகளை அதிகரிக்க வேண்டும் என்று அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. சமூகரீதியான சோதனைகளை முன்னெடுப்பதற்கு அரசு தீர்மா னித்துள்ளதால் நாடு முழுவதும் சோதனைகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
தற்போது யாழ்ப்பாணப் பல்க லைக்கழக மருத்துவ பீடத்தில் மாத்திரமே சோதனைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டொரு தினங்களில் யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனையில் பரிசோதனை கள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

நயினாதீவு இந்து கலாச்சார அபிவிருத்திச் சபையின் (கோப்பிசபை)
ஆரம்பகால உறுப்பினரும், ஆயுட் காலச் செயலாளரும், சமய
சமூகத் தொண்டருமான

**அமர் திருவாளர் விசுவலிங்கம் சபாநாதன் J.P**

அவர்களின் மறைவையொட்டி எம் இதயம் சாற்றும்

# கண்ணீர் அஞ்சலி



நாகபூஷணித்தாய் நயினைக்களித்த செயல்வீரன்
நற்பணிகள் பல ஆற்றி நின்ற பெரும் வீரன்
தாகமென வருவோர்க்கெல்லாம் தண்ணீர்ஊற்றி
தக்க பணி ஆற்றி நின்ற பெருந்தகையோன்

முதுமையிலும் சேவை செய்து முகம்மலர்ந்து எமை அணைத்து
கருமமதை முடிப்பதற்கு முதுகெலும்பாய் இருந்தவர் நீர்
எவர் தயவு வேண்டும்போதும் அவர் இடத்தை நாடிவந்து
பணி முடித்து அகமகிழும் பாங்குளோரை எங்குகாண்போம்

ஆலயங்கள் அமைப்பதற்கும். அறப்பணிகள் செய்வதற்கும்
பார்முழுதும் தேடினாலும் உம்மைப்போல் யார் வருவார்
அகம் நெகிழும் வார்த்தையுடன் அழகான புன் சிரிப்பில்
பரிவுடனே நாடிவந்து செயல் முடித்த வீரன் எங்கே

மண் விளைந்த மாணிக்கம் மரணித்து விட்டாலும்
விண்ணதிர ஒளி பரப்பி மண்ணுலகில் வாழ்ந்தவர் நீர்
கால் பதித்த இடமெல்லாம் நின் கதைபேசும் எப்போதும்
நீர் பதித்த தடம்போல் இனியார் பதிப்பார் இவ்வுலகில்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவுத் துயரில்

**நயினாதீவு இந்து கலாச்சார
அபிவிருத்திச் சபையினர்.**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 28 |
| 08 | 04 |
| 1960 | 2020 |

## வீரகத்தி குருசாமி

**(உரிமையாளர், வானதி அரிசி ஆலை, சாமியன் அரசடி, கரவெட்டி)**

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி மத்தி, தச்சந்தோப்பு வீதி, சம்பந்தர் கடையடியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி குருசாமி நேற்று (28.04.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-செல்வநாயகி தம்பதியரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி (குமாரு), இலட்சுமி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, கிருஷ்ணசாமி மற்றும் கந்தசாமி (UK Transport உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி செல்வநாயகியின் (றஞ்சி) அன்புக் கணவரும், சுஜிந்தா, ஆர்த்திகா (மருத்துவ பீடம் - யாழ். பல்கலைக்கழகம் 40 வது அணி மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.பார்த்தீபனின் (வைத்திய அதிகாரி, அனுராதபுரம் வைத்தியசாலை) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

*ஊரடங்கு...*

கைதுசெய்யப்பட்டார்.

விசாரணையின் பின்னர் மேற்குறித்த குற்றச்சாட்டுக்களுடன் யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

அவருக்கு குற்றப்பத்திரம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. தன்மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டார். அதனால் அவரைக் குற்றவாளியாக இனங்கண்டு ஊரடங்கை மீறியமைக்காக 100 ரூபா தண்டமும் தனிமைப்படுத்தலை மீறியமைக்காக 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 264ஆம் பிரிவின் கீழ் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ள இடங்களில் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் விதிகளை அறிந்திருந்தும் அதனை மதிக்காது நடந்துகொள்ளும் நபர் ஒருவருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை அல்லது ஆயிரத்து 500 ரூபாவை விஞ்சாத தண்டம் அல்லது சிறை மற்றும் தண்டப்பணம் அறவீடு ஆகிய தண்டனைகளை விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-37)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15.12.1933 | 28.04.2020 |

திருமதி

## திருமகள் கணபதிப்பிள்ளை

(வேலணை கிழக்கு - 1 ஆம் வட்டாரம்)

வேலணை கிழக்கு-1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 107/3, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி திருமகள் கணபதிப்பிள்ளை நேற்று (28.04.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், அருட்செல்வி (ஓய்வுநிலை சிரேஷ்ட தாதிய விடுதிச் சகோதரி.யாழ் போதனா வைத்தியசாலை, தாதிய சேவையில் மீள் நியமனம் பிரதேச வைத்தியசாலை.அனலைதீவு), சிவநாதன் (ஓய்வுநிலைத் தபால் திணைக்கள ஊழியர்.வேலணைத் தபால் நிலையம்), பிரணவநாதன், அருள்வாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கணபதி (தீவகக் கல்வி வலயம்), ரவீந்திரராணி, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.தசாகன், தசானுசன் (மென்பொறியியலாளர்), சிவடினூஜினி (யாழ் பல்கலைக்கழகம் 2ம் வருட மாணவி), பவஷாயினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, உயர்தர வகுப்பு மாணவி 2021), சிறிசாயினி (யா/திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை), சாயீஷன் (யாழ். மத்தியக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், நாமகள், காலஞ்சென்றவர்களான நடராசா (விஞ்ஞானி), கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**107/3, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.
077 868 9678, 021 222 5607**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



## வீரசிங்கம் காராளசிங்கம்

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ்.புகையிரத நிலையம்)**

யாழ்.உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், யாழ். இராசாவின்தோட்டத்தை வதிவிடமாகவும், தற்போது பிரித்தானியா Epsom ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் காராளசிங்கம் கடந்த (23.04.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் பகவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு-ராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், முத்துலட்சுமியின் பாசமிகு கணவரும், கலாறஜனி, ஷமீலவதனி ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், வசந்தபவன், குகநேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், விறோஜன், விபூஷன், நிக்ஷயா, நிகாரிகா, குசேலன்கிங் ஆகியோரின் நேசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம், இராஜசிங்கம், தனபாலசிங்கம், விஜயசிங்கம், குணபாலசிங்கம், வினோதினி மற்றும் நவரட்ணசிங்கம், ஜெயபாலசிங்கம், பூபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 . 06 . 1937 | 28 . 04 . 2020 |

### வே.ச.விசுவலிங்கம் சபாநாதன் ஜே.பி

**(ஓய்வுநிலை காணி அபிவிருத்தி உத்தியோகத்தர், நயினையூர் இந்து கலாசார அபிவிருத்திச் சபை செயலர், முன்னாள் நயினை மீனாட்சி அம்மன் ஆலய தவிசாளர், நயினை நாகபூஷணி ஆலய அறங்காவலர் சபைப் பொருளாளர்)**

நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் சபாநாதன் நேற்று (28.04.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வே.ச.விசுவலிங்கம்-நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-கண்மணி தம்பதியரின் மருமகனும், ஓய்வுநிலை அதிபர் தவமணியின் அன்புக் கணவரும், திருமதி பாமதி-சத்தியேஸ்வரனின் பாசமிகு பெரிய தந்தையும், பிரசாந், சாம்பவி, விநோத் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான யோகநாதன், வேதநாதன், புண்ணியநாதன் மற்றும், மகேஸ்வரநாதன், மீனாட்சி ஆகியோரின் ஆசை சகோதரரும், காலஞ்சென்றவர்களான சோமேஸ்வரி, மாலினிதேவி, நவனீதகிருஷ்ணன் மற்றும் சொர்ணம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2020) புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.**


**தகவல்:
தவமணி-சபாநாதன்
(மனைவி)**

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் அரைக்கும்
ஆலைக்கு மில் வேலை தெரிந்தவர்களும்,
உதவியாள்களும் தேவை.
தொடர்புக்கு:
**P.N: 077 610 4812**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021493 1111

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27 . 09 . 1931 | 24 . 04 . 2020 |

### வல்லிபுரம் நாகேந்திரம்

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், மாவட்ட செயலகம்-யாழ்ப்பாணம்.)

அளவெட்டியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகேந்திரம் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்) கடந்த (24.04.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விமலாதேவியின் அன்புக் கணவரும், அம்பிகைபாலா (U.K), கௌரிசங்கர், ஶ்ரீஸ்கந்தா (மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர், மட்டக்களப்பு), முருகன் (RB Electronics) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஜனனி (U.K), கீதாஞ்சலி, கார்த்திகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் RDHS Office, Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதிகஜன் (U.K), ஜெனிஷா, அஸ்வின், சோபனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி, கண்ணகை அம்மா, நாகேஸ்வரி, சரஸ்வதி, நடராசா, புஷ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நீலாயதாட்சி, காலஞ்சென்ற கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26.04.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**52/6-3, உடையார் ஒழுங்கை,
பழம் வீதி, கந்தர்மடம்.**

**தகவல்: குடும்பத்தினர்.
077 2696646/0779236931**

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



## அமரர்

## மகேஸ்வரி மாணிக்கவாசகர்

### (உரிமையாளர் SMK ரேடர்ஸ்

### பிரம்படி-கொக்குவில்

அம்மா.. எங்கள் மகேஸ் அம்மா.. (கிளி அக்கா)
குடும்பத்தை கோயிலாக்கி..
மானிடப் பிறப்பின் மகத்துவத்தை உணரவைத்து..
நானிலத்தோர் தேடுகின்ற அறவழியில் வாழ்வமைத்து
கிளியினை ஒத்த பேச்சாலே
அனைவரையும் அரவணைத்து
வறியோர்க்கு கரம் கொடுத்து
கல்விக்குக் கொடைகொடுத்து
பூதலத்தோர் போற்றிடவே வாழ்ந்தீர்... தாயே
உங்கள் ஊனினை உருக்கி எம்மை
மேன்மக்களாக்கி விட்டு
வானுலகு சென்றின்று ஓராண்டு ஆனதம்மா - தாயே
இந்நாளில் உங்களை நினைவு கூருகின்றோம்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.12.1945 | 11.05.2019 |

*என்றும் உங்கள் நினைவுகளுடன்*


**குடும்பத்தினர்.**

# தானாக மூடியது ஓசோன் துவாரம்!

லண்டன், ஏப். 29


ஓசோன் படலத்தில் இந்த ஆண்டில் ஏற்பட்ட இமாலய அளவுடைய துளை, தானாக மூடியுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சூரிய ஒளியில் இருந்து வெளியாகும் புற ஊதாக் கதிர் உள்ளிட்ட தீங்கு விளைவிக்கும் கதிர்வீச்சுகளை பூமிக்கு வராமல் தடுக்கும் இயற்கை அரணாக ஓசோன் படலம் விளங்குகிறது. பூமியை சுற்றிலும் காணப்படும் இந்த ஓசோன் எனப்படும் ஒக்சிசன் படலமானது சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது.



ஆனால், வாகனங்களின் புகை, தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கார்பன் மோனாக்ஸைடு உள்ளிட்ட பசுமை இல்ல வாயுக்களால் ஓசோன் படலத்தில் கடந்த காலங்களில் ஆங்காங்கே பெரியபெரிய துளைகள் ஏற்பட்டன.

இந்தச் சூழ்நிலையில், கடந்த டிசெம்பர் மாதம் முதல் கொரோனா வைரஸ் பரவியதால் சீனா, அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இந்தியா என பல நாடுகளில் வெவ்வேறு கால கட்டங்களில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த ஊரடங்கு காரணமாக பல்வேறு நாடுகளில் இயங்கி வந்த தொழிற்சாலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டன. வாகனப் போக்குவரத்து இல்லை. இதனால் பூமியில் இருந்து வெளியாகும் மாசுக்களின் அளவும் வெகுவாக குறைந்தது. அதிசயிக்கும் விதமாக ஓசோனில் ஏற்பட்டிருந்த அந்த ராட்சதத் துளை தானாக மூடிக்கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. (ம)



## மேலும் 14 நாடுகளுக்கு ஜப்பான் தடை விதிப்பு

டோக்கியோ, ஏப். 29

கொரோனா வைரஸ் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள நிலையில் மேலும் 14 நாடுகளின் பயணிகளுக்கு ஜப்பான் பயணத் தடை விதித்துள்ளது.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக 70 நாடுகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் அந்த நாடுகளுக்குச்சென்று வந்தவர்கள் ஜப்பானுக்குள் நுழைய ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது ரஷ்யா, பெரு, சவுதி அரேபியா உள்ளிட்ட மேலும் 14 நாடுகள் அந்த பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. (ம)

# கொரோனா பாதிப்பு 30 இலட்சங்களானது

வொஷிங்டன், ஏப்ரல் 29

**கொரோனாவால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 லட்சங்களாக அதிகரித்தது.**




சீனாவின் வுகான் நகரில் தோற்றம்பெற்ற கொரோனா வைரஸ் உலகின் 210 நாடுகளுக்கு தற்போது பரவியுள்ளது. இந்த வைரஸால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா தான் முதலிடத்தில் உள்ளது. அங்குமட்டும் சுமார் 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 55 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த நான்கு வாரங்களாக ஒவ்வொரு நாளும் 3 ஆயிரத்துக்கும் குறையாத உயிரிழப்புக்களும், 70 ஆயிரத்துக்கும் குறையாத புதிய நோயாளர்களும் அவதானிக்கப்பட்டுக்கொண்டு உள்ளனர். இந்த நிலையில் உலக அளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 லட்சத்தைத் தொட்டுள்ளது. 2 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். (ம)

## நெருங்கி வந்தால் கட்டிப்பிடிப்பேன்!!

### மருத்துவமனையில் இருந்து தப்பித்துச் சென்ற நோயாளி

சென்னை, ஏப். 29



சென்னையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்ப்ட்ட நபர் யாரேனும் தன்னிடம் வந்தால் கட்டிப்பிடிப்பேன் என்று கூறி மருத்துவமனையில் இருந்து தப்பி ஓடிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புளியம்தோப்பு பகுதியை சேர்ந்த 45 வயதான நபர் ஒருவருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவர் சென்னையில் உள்ள ராஜிவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு தன்னை யாரேனும் பிடிக்க வந்தால் அவர்களை கட்டிப்பிடித்து கொரோனா பரப்பிவிடுவேன் என்று கூறி மருத்துவமனையில் இருந்து தப்பித்து அவருடைய வீட்டுக்குச் சென்று விட்டார். பின்னர் தான் அந்த நபர் சிறிது மன நலம் பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து பொலிஸாரும் மருத்துவர்களும் அவரை மருத்துவமனைக்கு கொண்டுவர போராடி வருகின்றனர். (ம)

# கொரோனா பேயாட்டம் குழந்தைகளால் கவலை

### உலக சுகாதார அமைப்பு கவலை



நியூயோர்க், ஏப். 29

உலக அளவில் கொரோனாவின் தாக்கம் மிகையாக அதிகரித்துள்ள நிலையில், குழந்தைகளால் தாம் ஆழ்ந்த கவலையடைகின்றோம் என்று தெரிவித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.

இது தொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

எமக்கு முன்னால் பெரும் தொலைவான பாதை தெரிகிறது. இன்னும் நிறைய வேலை செய்ய வேண்டியுள்ளது. இன்னும் பெருந்தொற்றின் தாக்கம் ஓயவில்லை. பிற நோய்களுக்கான வாக்சைன்கள் 21 நாடுகளில் தட்டுப்பாடு என்ற செய்திகள் கவலையளிக்கின்றன. காரணம் கொரோனாவினால் எல்லைகள் மூடப்பட்டிருப்பதே. ஆபிரிக்க நாடுகளில் இதனால் மலேரியாக் காய்ச்சல் நோய்கள் இரட்டிப்படையும் அபாயம் உள்ளது. ஆனால் நாங்கள் சில நாடுகளுடன் சேர்ந்து அந்த நிலைமை ஏற்படாமல் தடுக்கப் பாடுபட்டு வருகிறோம்' - என்றார். (ம)

# டோனியுடன் ஒப்பிடாதீர்கள்

## கே.எல்.ராகுல் கோரிக்கை!!



புதுடெல்லி, ஏப். 29

ஒரு பிடியெடுப்பைத் தவறவிட்டால் உடனே டோனியுடன் ஒப்பிடு கின்றார்கள். அதுவே பிரச்சினையாக உள்ளது. டோனியுடன் என்னை ஒப்பிடுவது ஏற்புடையது அல்ல - என்று தெரிவித்துள் ளார் இந்திய அணியின் இளம் வீரர் ராகுல்.

டோனி தொடர்பில் ராகுல் தெரிவித்ததாவது:

இந்திய அணிக்காக இலக்குக்காப்புச் செய்யும்போது பதற்றமாக உள்ளது. ஏனெனில் ரசிகர்கள் உன்னிப்பாகப் பார்க்கின்றனர். பந்தைத் தவறவிட்டால் உடனே இவர் டோனியின் இடத்துக்குச் சரிப்பட மாட்டார் என்று நினைத்து விடுகின்றனர். மக்கள் அவ்வ ளவு எளிதாகப் புதியவர்களை ஏற்பதில்லை. ஆனால் என்னை நன்றாக அறிந்தவர்களுக்குத் தெரியும் நான் விக்கெட் கீப்பிங்கில் எப்படி தினசரி பயிற்சியில் இருக்கிறேன் என்று மேலும் அணி என்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தால் அதை ஏற்கனவே நான் விரும்புவேன் - என்றார். (ம)



# வில்லியம்சன், சிமித், விராட் ஆகியோரே சிறந்த வீரர்கள்

## வோர்ணர் வெளிப்படைப் பேச்சு

சிட்னி, ஏப். 29

வில்லியம்சன், சிமித், விராட் கோலி ஆகியோரே இந்தத் தலைமுறையின் சிறந்த வீரர்கள் என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டேவிட் வோர்ணர்.

இது தொடர்பில் வோர்ணர் மேலும் தெரிவித்த தாவது:

கிரிக்கெட் உலகம் தற்போது ஏராள மான விளையாட்டு வீரர்களைக் கண் டுள்ளது. ஆனால் தற்போது விளை யாடிவரும் வீரர்களில் (ஓய்வு பெறாத) சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக கோலி, சிமித், வில்லியம்சன் ஆகியோரைத் தான் தெரிவுசெய்வேன்.


இவர்கள் மூவரும் சிறப்பானவர்கள். அவ்வளவு இலகுவில் வீழ்த்த முடியா தவர்கள். தமது அணிக்காக மிகவும் அர்ப்பணித்து விளையாடக்கூடியவர் கள் - என்றார்.

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலை வரான ரூட், சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒரு வராக உள்ளார். ஆனால் அவரை வோர்ணர் தெரிவுசெய்யாதமை சர்ச்சையை ஏற்படுத்தியுள் ளது. வோர்ணருக்கும் சிமித்துக்கும் இடையில் ஆஷஸ் தொடரொன்றில் பெரும் மோதல் ஏற் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# சி.எஸ்.கேயால் விலக்கப்பட்டமை எனது முகத்தில் விழுந்த அறை

## அஸ்வின் வேதனை



சென்னை, ஏப். 29

சென்னை சுப்பர் கிங்ஸில் இருந்து விலக்கப்பட்ட தருணம் முகத்தில் விழுந்த அறையாகவே இருந்தது - என்று தெரிவித்துள்ளார் தற் போது டெல்லி அணியில் இடம்பி டித்துள்ளவரான அஸ்வின்.

இது தொடர்பில் அஸ்வின் மேலும் தெரிவித்ததாவது:

'ரி20 ஆட்டங்களில் பந்துவீசுவதென்பது முதல்தர ஆட்டங்க ளில் பந்துவீசுவதை விடவும் சுலபமானது என்று நான் எண்ணி யிருந்தேன்.

ஆனால் அது முழுவதும் தப்பான கணக்காகும். தவறான ஒரு பந்துப்பரிமாற்றம் உங்களின் வாழ்க்கையையே முற்றுமுழுதாக மாற்றி விடும். பேரிடியை உங்கள் தலைகளில் இறக்கிவிடும். சென்னை சுப்பர் கிங்ஸுக்காக பெங்களூருக்கு எதிராக நான் இறுதியாக விளையாடினேன். 14, 16, 18, 20ஆவது பந்துப்பரி மாற்றங்களை நான் வீசினேன். 45 ஓட்டங்களை வழங்கினேன். இலக்கு எதையும் வீழ்த்தவில்லை. அடுத்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் என்னைப் புறக்கணித்தது. அணியில் இருந்து விலக்கப்பட்டேன். முகத்தில் விழுந்த பெரும் அறையாகவே இதைக் கருதுகின்றேன் - என்றார். (ம)




# ‘என் மகனின் கிரிக்கெட் வாழ்வை முடித்துவிட்டாயே’ யுவராஜிடம் புலம்பிய ஸ்ருவேர்ட் புரோட்டின் தந்தை!

எனது மகனின் கிரிக்கெட் வாழ்வை முடித்துவிட்டாயே என்று தன்னிடம் ஸ்ருவேர்ட் புரோட்டின் தந்தை புலம்பி னார் என்று யுவராஜ் சிங் தெரிவித்தார். 6 பந்துகளில் 6 சிக்சர்களை விளாசிய தருணத்தை மீண்டும் நினைத்துப் பார்த்து யுவராஜ் தெரிவித்ததாவது:

அந்த ஆட்டத்தில் முந்தைய பந்துப் பரிமாற்றத்தில் இங்கிலாந்தின் சகல துறை வீரர் பிளின்டொப் என்னை சீண்டி வெறுப்பேற்றினார். அவர் ஏதோ சொல்ல, நானும் சில வார்த்தைகளை உதிர்த் தேன். இதனால் கூடுதல் உத்வேகத்தில் இருந்த நான் புரோட் வீசிய அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் 6 பந்துகளையும் சிக்சருக்குப் பறக்கவிட்டு அசத்தினேன். இங்கிலாந்துக்கு எதிராக ஒரே பந்துப்ப ரிமாற்றத்தில் 6 சிக்சர்கள் விளாசியது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்தது. ஏனெனில் முந்தைய வாரத்தில்தான் இங்கிலாந்து வீரர் மாஸ்கரனாஸ் எனது பந்து வீச்சில் ஒரே ஓவரில் 5 சிக்சர் அடித்திருந்தார். இந்த ஆட்டத்தில் நான் 6ஆவது சிக்சரைத் தூக்கியதும் முத லில் பிளின்டாப்பை தான் நோக்கி னேன். அடுத்து மாஸ்கரனாஸ் பக்கம் திரும்பினேன். அவர் என்னை பார்த்துச் சிரித்தார்.

இந்தத் தொடரில் ஸ்டூவர்ட் புரோட்டின் தந்தை கிறிஸ் புரோட் போட்டி நடுவர்க ளில் ஒருவராக பணியாற்றினார். அவர் மறுநாள் என்னிடம் வந்து, ‘ஏறக்குறைய நீ எனது மகனின் கிரிக்கெட் வாழ்க் கையை முடித்து வைத்துவிட்டாய். இப்போது அவனுக்கு நீ கையெழுத் திட்டு ஒரு ஜெர்சியைத் தருவாயா?' என்று கேட்டார். நான் இந்திய அணிக் குரிய சீருடையை அவரிடம் வழங்கி னேன் - என்றார். (ம)

# உமர் அக்மலுக்கு 3 ஆண்டுகள் தடை

இஸ்லாமபாத், ஏப். 29

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவு மேற்கொண்ட விசார ணைகளின் அடிப்படையில் பாகிஸ் தான் கிரிக்கெட் வீரர் உமர் அக்மலுக்கு 3 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள் ளது.

உமர் அக்மல் கடந்த பெப்ரவரி மாதம் பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் விளை யாட இருந்தார். எனினும் அப்போது அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது. பின்னர் தற்காலிகமாக நீக்கப்பட்டார் உமர் அக்மல். ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசார ணைகள் இடம்பெற்றன. உமர் அக்மல் மீதான குற்றங்கள் உறுதிப்படுத்தப்பட் டதைத் தொடர்ந்து அவருக்கு 3 ஆண்டு கள் தடை விதிக்கப்பட்டது. (ம)

**பணிப்பெண் தேவை**

உரும்பிராயில் வசிக்கும் சிறிய குடும்பத்திற்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய **பணிப்பெண் தேவை.**

தொடர்பு:- 077 6095 604



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.04.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.